# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 20 செவ்வாய்க்கிழமை (05-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:214


# கொழும்புத்துறையில் நேற்றும் தொடர்ந்து கடும் சண்டை!

## அமைச்சர் சேரசிங்க மீது தாக்குதல்!

கொழும்பு,செப்.5

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அனுராதபுர மாவட்டத் தலைவரும் உள்ளூர் விமான சுற்றுலாத்துறை அமைச்சருமான எஸ்.பி. சேரசிங்க் நேற்றுக் காலை இனந் தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்கானதாக பொலீஸார் தெரிவித்தனர்.

பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட சமயமே இத்தாக்குதல் இடம்பெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் உக்கிரத் தாக்குதல்; எனினும் படைநிலைகள் குலையவில்லையாம்

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்5

**கொழும்புத்துறையில் நேற்றுக் காலை தொடக்கம் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்தும் கடும் சண்டை நடைபெற்றதாகவும் -**

**சரசாலை, நுணாவில் பகுதிகளில் ஞாயிற்றுக் கிழமை தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பிய படையினரைப் புலிகள் தாக்கியதால் அங்கும் சண்டை மீண்டும் மூண்டதாகவும் - அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொழும்புத்துறையில் படையினர் அமைத்த புதிய முன்னணி அரண்களை நிலைகுலையச் செய்யும் பொருட்டு இரண்டு தடவைகள் புலிகள் உக்கிரத் தாக்குதலை நடத்திய போதிலும் படையினரின் நிலைகளைக் குலைக்க முடியவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைத் தளபதிகளும் பலாலியில்

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக முப்படைத்தளபதிகளும் பலாலி வந்திருந்தனர் என்று இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல நேற்று முன்தினம் கண்டி சென்று மகாநாயக்கர்களின் ஆசியைப் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணம் சென்றதாகக் கூறப்பட்டது.

தாம் நேரடியாக யாழ்ப்பாணம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 21 சடலங்கள் நேற்று படையினரால் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,செப்.5

செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின்போது தம்மால் மீட்கப்பட்டதெனத் தெரிவித்து மேலும் 21பேரின் சடலங்கள் நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் படையினரால் ஒப்படைக்கப்பட்டன. இந்தச் சடலங்களில் 12 பெண்களுடையவை ஆகும். நேற்று முன்தினம் இரவும் 14 பெண்க ளின் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை [illegible]ிந்ததே.இந்தச் சடலங்களில் நல்ல நிலையில் உள்ள 15 சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கவிருப்பதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-5-9-15-139)

## இலக்கை அடைந்துவிட்டதாக படையினர் தரப்பில் தெரிவிப்பு

படையினர், சில குறிக்கோள்களை முன்வைத்து மேற்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை திட்டமிட்ட வெற்றியை எட்டியது என்று, இராணுவப் பேச்சாளர், பிரிகேடியர் சனத்கருணரத்தின தெரிவித்தார்.

கொழும்புத்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

"திட்டமிடப்பட்ட இலக்கை எட்டியதும் இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது. புலிகளின் எதிர்த்தாக்குதலால் இது நிறுத்தப்பட்டது என்பதில் அர்த்தம் இல்லை" என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## வேட்பாளர் பட்டியலில் அமைச்சுச் செயலர்களும்!

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ். மாவட்டத்தில் போட்டியிட தேசிய ஐக்கிய முன்னணியினால் யாழ். செயலகத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர் பட்டியலில் அமைச்சுக்களில் உயர்பதவி வகிப்பவர்களின் பெயர்களும் இடம் பெற்றிருந்ததாகக் கூறப்பட்டது: கப்பல்துறை, கிழக்குப் புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சு, மேலதிகச் செயலாளர்களான ரி.லங்காநேசன், ஏ.ஜெயரத்தினம் ஆகியோரின் பெயர்களும் - மாகாணக் கல்வி அமைச்சுச்

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.மாவட்டத்தில் 20 அணிகள் போட்டி!

## ஷெல் தாக்குதல்கள், குண்டுவீச்சுக்கள் மத்தியில் வேட்பு மனுத்தாக்கல் பூர்த்தி

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்5

**எதிர்வரும் ஒக்ரோபர் பத்தாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு மொத்தம் இருபது அணிகள் களத்தில் குதித்துள்ளன. வேட்பு மனுத்தாக்கல் செய்த பதின்நான்கு அரசியல்கட்சிகளுக்கும், ஆறு சுயேச்சைக் குழுக்களுக்கும் நேற்று யாழ். செயலகத்தில் வைத்து அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டன.**

யாழ். மாவட்டத்தில் ஒன்பது நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான இத்தேர்தலில் மொத்தம் 240 வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர்.

யாழ். நகரிலும், குடாநாட்டிலும் இராணுவ நடவடிக்கைகள் நேற்று உக்கிரமடைந்திருந்த போதிலும் தேர்தல் பணி தடங்கல் இன்றி நடந்தேறியது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் பணி நேற்று நண்பகல் 12 மணியுடன் பூர்த்தியானதைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிப

(12ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்கள் அச்சமின்றி மீளக்குடியமர வேண்டும்

## வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்கள்,விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி அச்சமற்ற சூழலிலே இங்கு மீண்டும் குடியமர விரும்புகிறார்கள்.

இவ்வாறு வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் செயலாளரும் சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளருமான அஹமட் சுல்தான் சுபியான் தெரிவித்தார்.

யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள கட்டடமொன்றில் நேற்று மாலை நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச்செய்தியாளர் மாநாட்டில் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் மொஹமட் காசிம், சுயேச்சைக்குழு வேட்பாளர் மொஹமட் றமீஸ், சாகுல் ஹமீத் நைநூர் ஆகியோரும் உடனிருந்தனர்.

அஹமட் சுல்தான் சுபியான் மேலும் கூறியதாவது:-

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களினால் அரசியல் கலப்பற்ற அமைப்பு ஆகும்.

(11ஆம் பக்கம் பார்க்க)



**யாழ். மாவட்டத் தேர்தலில் போட்டியிடும் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் முதன்மை வேட்பாளர் அஹமட் சுல்தான் சுபியான் (மத்தியில்) நடத்திய செய்தியாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட படம். அவருக்கு அருகே வேட்பாளரான மொஹமட் றமீல் சாகுல் ஹமீத் நைபூர், மொஹமட் காசிம் ஆகியோர் காணப்படுகின்றனர்.**

*படம்: கொனிக்கா கலர்லாப்*

## கோப்பாயில் ஷெல்லுக்கு இளம் பெண் பலி

யாழ்ப்பாணம்,செப்.5

கோப்பாய்ப் பகுதியில் கிளுவானை ஒழுங்கையில் நேற்றுக் காலை 10 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் தொண்டராசிரியரான இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கைதடியில் இருந்து இடம் பெயர்ந்து கந்தரோடையில் வசித்து வந்த நடராசா நிதர்சனி(வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் நேர்முகப் பரீட்சை ஒன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்று வழமை நிலை பாதிப்பு

### பாடசாலைகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம்,செப்.5

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதல் சம்பவம் காரணமாக யாழ். நகரப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

விமானம் மற்றும் ஹெலிகளின் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் காரணமாகப் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கல்விப் பணிப்பாளர் பணிமனைக்கு புதிய வாகனம்

யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனைக்குப் புதிய வாகனம் ஒன்று கிடைக்கவிருக்கின்றது. இந்த வாகனத்தை திருகோணமலையில் மாகாணக்கல்வி அமைச்சச் செயலாளரிடம் பொறுப் பேற்பதற்காக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை இன்று அங்கு செல்லவிருக்கின்றார்.

இந்த வாகனத்தை திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர யாழ்.அரசஅதிபர் க.சண்முகநாதன் கப்பல் வசதி செய்து கொடுக்கவிருக் கின்றார். இந்தப் பணிமனை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து வாகனமொன்று வழங்கப்படாதது குறிப்பிடத்தக்கது. (இ-3)


MATHS CENTRE
NELLIADY

A/L - 2000 எடுத்த மாணவர்களுக்கான விசேட

ENGLISH CLASS

ஆசிரியர்- திரு.ஜோதி

பிரிவு III அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பம்: 10.09.2000 ஞாயிறு
8.00 a.m. (பழைய நேரம்)

(C/12810)


## மாணவர்களின் பொது அறிவு நுண்ணறிவு வளர்ச்சிக்காக யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய பொது அறிவு நுண்ணறிவு தேடலிற்கான பரீட்சை – 2 இன் முடிவுகள்

முதலாம் பரிசு : **இராசலிங்கம் வித்தகன்**
தரம் 13, கொக்குவில் இந்துக் கல்லூரி.

இரண்டாம் பரிசு : **சிந்து ஸ்ரீபதி**
தரம் 6, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

மூன்றாம் பரிசு : **றோஜினி பரஞ்சோதி**
தரம் 13, இணுவில் இந்துக் கல்லூரி.

மேலும் 50, 75, 75, 100 மாணவர்கள் முறையே A,B,C,D தராதிக்களைப் பெற்று சான்றிதழ்களைப் பெறுகின்றனர். அவர்களுக்கான சான்றிதழ்களும், வினாக்களுக்கான விடைகளும் அவர்களது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:-
2000ஆம் ஆண்டு முதலாம் தவணைக்காக இப்பரீட்சை நடத்தப்பட்ட போதும் நாட்டில் ஏற்பட்ட திடீர் அசம்பாவிதங்களால் முடிவுகள் உடனடியாக வெளியிடப்படவில்லையென்பதுடன் 2ஆம் தவணைக்கான பரீட்சையும் நடத்தப்படவில்லை. 3ஆம் தவணையில் சூழ்நிலைக்கேற்ப பரீட்சை தொடரப்படும் என்பதை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அறியத்தருகிறோம்.

Rtr. P.வானதி
செயற்திட்ட இயக்குநர்

(78029)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வி.குழந்தைவேலு
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி ஆச்சிப்பிள்ளை கந்தையா**

அவர்களின் மறைவையிட்டுத் துயருறும் குடும்பத்தினரின் துன்பத்தில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
யா/பெரியபுலம் ம.வி.

(78036)

# விமான, கடற்படைகளில் இருந்து தப்பியோர் மீண்டும் சேர விருப்பம்

## பாதுகாப்பு அமைச்சுக்கு கோரிக்கை

[illegible] விமானப்படை, கடற்படை ஆகியவற்றிலிருந்து தப்பியோடிய படையினர் தாங்கள் மீண்டும் சேவையில் இணைய வசதியாக பொது மன்னிப்புக் காலம் ஒன்றை அறிவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டிருக்கின்றனர்.

கடந்த காலங்களில விமான மற்றும் கடற்படைகளிலிருந்து பெரும் எண்ணிக்கையானோர் தப்பிச் சென்றுள்ளனர். இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றோர் சரணடைய பல தடவைகள் காலக்கெடுக்களும், பொதுமன்னிப்புக் காலங்களும் அறிவிக்கப்பட்டபோதும் தமக்கு இதுவரை கால அவகாசம் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று விமானப்படையிலும், கடற்படையிலும் [illegible] 'லங்காதீப' செய்தி [illegible] கள் காரணமாகத் தாங்கள் சேவையிலிருந்து தப்பிச் சென்றுள்ள போதிலும் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருதி மீண்டும் சேவையில் இணைய விருப்பம் கொண்டுள்ளதாக விமானப்படை, கடற்படை என்பவற்றில் இருந்து தப்பிச்சென்றோர் கூறியிருப்பதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-186)

## சந்திக்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.5

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்க,பழைய மாணவா சங்க உறுப்பினர்கள் ஆகியோரை நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குத் தம்மை யாழ். இந்துக் கல்லூரியில் சந்திக்கும்படி வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார். (இ-3)

## தேர்தல் செயலக சபை

தேர்தல் பிரசார காலத்திலும், தேர்தல் நாளன்றும் வன்முறைகள், மோசடிகள் என்பவற்றைத் தவிர்க்க பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான தேர்தல் செயலக சபை நேற்று மாலை அமைக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்பட்ட இந்தச் சபையில் அனைத்துக் கட்சிகளதும் சுயேச்சைக் குழுக்களினதும் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பார்கள்.

இதேவேளை - வேட்புமனுத் தாக்கல் நாள் முதல் இதுவரை வன்முறைகள் இடம்பெற்றதாக முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ-8)


நாகம்ஸ்
சுன்னாகம்
அஜித் – ஷாலினி
நடிப்பில்
அமர்க்களம்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00,2.30 (பு.நே.)
(78026)

ராஜா
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், கௌசல்யா,
அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்
பூவேலி
காட்சிகள்: 10.30, 2.00
(புதிய நேரம்)
(C/12325)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மங்கையர்க்கரசி அருணாசலம்

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி அருணாசலம் அவர்கள் 31-08-2000 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும், மாலாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வரதராஜாவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் நாகபூஷணி, கனகநாயகம், சரஸ்வதி, பாலகிருஷ்ணர், மீனா, குமாரதேவர் ஆகியோரின் சகோதரியும், கௌசலி, அபிரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 01-09-2000 அன்று நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*44, வயிரா வீதி,*
*பம்பலப்பிட்டி,*
*கொழும்பு - 4.*
(C/12814)

தகவல்:
திருமதி மா.வரதராஜா
(மகள்)

## திருமதி கோபாலகிருஷ்ணன் இராஜேஸ்வரி

நல்லூர் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலகிருஷ்ணன் இராஜேஸ்வரி 04-09-2000 அன்று காலமாகிவிட்டார்.

இவர் கோபாலகிருஷ்ணனின் (பிரான்ஸ்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், சுபோதினி, சோபிதவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகநாயகத்தின் (உமா பான்சி பலஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம்) அன்பு மாமியாரும், சுப்பிரமணியம் (வலயக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் பிரிவு), கமலேஸ்வரி, யோகேஸ்வரி, சத்தியனேஸ்வரி (ஜேர்மன்), மகேந்திரன் (மக்கள் வங்கி, நுவரெலியா), திலகராணி (ஆசிரியை, பொலன்னறுவ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தர்மலிங்கம் (மூளாய் வைத்தியசாலை), அமிர்தலிங்கம் (கொழும்பு), சிவலிங்கம் (கனடா), ஆச்சிமுத்து, சுபத்திராதேவி, காலஞ்சென்ற பூலோகராணி, பொன்மலர் ஆகியோரின் மைத்துனியும், அனுரேகா, அட்சரபானு, அனுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05-09-2000) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

*166, கோயில் வீதி,*
*நல்லூர்.*
(78035)

தகவல்:
க.கனகநாயகம்
(மருமகன்)

## திருமதி சுந்தரமூர்த்தி மகேஸ்வரி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரமூர்த்தி மகேஸ்வரி 02-09-2000 சனிக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் நாகலிங்கம் செல்லமுத்துவின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய பரிசோதகர், இ.போ.ச.) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவராசா, தெய்வேந்திரம், திருமதி புவனேஸ்வரி பரராஜசிங்கம் (கனடா), திருமதி செல்வரத்தினம் பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரேஸ்வரி மற்றும் சுந்தரேஸ்வரன் (ஜேர்மன்), கீதவாணி (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), சிறீஉருத்திராதேவி (விசுவமடு), கௌரிதேவி, கருணாகரன் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனேஸ்வரி, மகேந்திரன், சந்திரசேகரம் (புறாத்) ஆகியோரின் அன்பு மாமியாரும், விக்னேஸ்வரன், கணேஸ்வரன், குலேஸ்வரி, மோகன், விஜி, துஷ்யந்தி, கஜேந்திரன், விசாகன், பிரதீபன், மேகலா, ராதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இணுவில் காரைக்கால் மயானத்தில் 03-09-2000 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*"சாந்தம்",*
*இணுவில் மேற்கு.* (78034)

தகவல்:
கீதவாணி மகேந்திரன் (மகள்)

## இளையதம்பி இராசையா

(சமாதான நீதிவான், கச்சேரி கிழக்கு கடுக்காயம்பதி - ஸ்ரீ ஞான வைரவர் ஆலய ஆயுள்காலத் தலைவர், கச்சேரி கிழக்கு சனசமூக நிலைய முன்னாள் தலைவர்)

யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு கடுக்காயம்பதியைப் பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசையா அவர்கள் நேற்று (04-09-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பி தங்கமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாபரன், பாஸ்கரன் (ஜேர்மனி), ஸ்ரீதரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி, சந்திராதேவி, அனித்தா, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிதா, சுரேன், சங்கீதா, சுதன், துஷ்யந்தன், பாஸ்ராஜ், ஜனகன், றெபேகா, மார்க்கஸ் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, சௌந்தரராணி மற்றும் யோகசேகரம், தர்மாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், யோகராசா, சின்னராசா மற்றும் சிவபாக்கியம், ஜெயலட்சுமி, நகுலேஸ்வரி, கோபாலகிருஷ்ணன், சண்முகராசா, அருளானந்தம், சிவசோதி, கலாமதி ஆகியோரின் சிறிய தந்தையும், காலஞ்சென்றவர்களான சபாபதி, துரையம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (05-09-2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் (பழைய நேரம்) தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]


வாடிக்கையாளருக்கு ஒரு நற்செய்தி

மீண்டும் புதுப் பொலிவுடன்.... பிரதான வீதி, பருத்தித்துறையில்
(வேலாயுதம் மகாவித்தியாலயம் அருகில்)
உங்கள் சேவையில் திருபோட்டோ அன் படப்பிடிப்பாளர்கள்
தமது சேவையை இன்று (05.09.2000) முதல் ஆரம்பித்துள்ளார்கள்.

எமது சேவையில்:- புகைப்பட பிரதியாக்கம்
வர்ண உட்புற வெளிப்புற படப்பிடிப்புகள்
எழில், தரம், திருப்தியே எமது சேவை!

திரு போட்டோ அன் படப்பிடிப்பாளர்கள்
பிரதான வீதி, பருத்தித்துறை.

## பெற்ற தாயின் மனம் துடிக்க

# ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை வெட்டிப் பிரிக்க நீதிமன்றம் உத்தரவு!

லண்டன்,செப்.5

பெற்ற தாய் மனம் துடித்து எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை வெட்டிப் பிரிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இங்கிலாந்தின் மான்செஸ்டரில் புனிதபமேரி மருத்துவமனையில் ஒரு பெண்ணுக்கு இரட்டைக் குழந்தைகள் ஒன்றோடு ஒன்று ஒட்டியபடி பிறந்தன. ஒரு குழந்தைக்கு ஜூடி என்றும் மற்றொன்றுக்கு மேரி என்றும் பெயர் சூட்டி குழந்தைகளின் தாயார் கொஞ்சி மகிழ்ந்தார். இந்த மகிழ்ச்சி அதிக நாள்கள் நீடிக்கவில்லை.

இரு குழந்தைகளுக்கும் சேர்த்து ஒரு இருதயமும், ஒரு ஜோடி நுரையீரல்களும் மட்டுமே - அதுவும் ஜூடியின் மார்புக் கூட்டுக்குள்-இருந்தன.

ஜூடியின் இருதயம், நுரையீரல்களே மேரிக்கு உயிர் கொடுத்தன. ஆனால் இருவருக்கும் அதிக நாள் உயிர் கொடுக்கும் சக்தி அவற்றுக்கு இருக்கவில்லை.

அதனால் இரண்டு குழந்தைகளையும் வெட்டிப் பிரித்தால்தான் ஜூடியாவது பிழைக்க முடியும் என்று மருத்துவர்கள் கூறினர். ஆனால் 10 மாதம் சுமந்து பெற்ற தாயின் மனம் இருவரில் ஒருவரைப் பிரிவதற்கு துணியவில்லை.

கண்ணீருடன் இந்த ஏற்பாட்டை அவர் மறுத்தார்.

மருத்துவர்கள் பிரச்சினையை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றனர்.

சட்டங்களையும், சாட்சியங்களையும் மட்டுமே பார்க்கும் நீதிமன்றம், துடிதுடித்து அழும் தாய் மனதின் கண்ணீரைப் பார்க்காது குழந்தைகளை வெட்டிப் பிரித்து ஜூடியை மட்டுமாவது உயிருடன் காப்பாற்றும்படி உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆணை வெளிவந்த பின்னர், தாய்க்கு ஆதரவாக ஒரு தரப்பும் தீர்ப்புக்கு சார்பாக மற்றொரு தரப்பும் என தற்போது இரு கட்சியாகப் பிரிந்து இங்கிலாந்து மக்கள் இப் பிரச்சினை குறித்துப் பேசி வருகிறார்கள். (ஒ)

## 10 நாள் போராட்டத்தின் முடிவில்

# மியான்மர் எதிர்க்கட்சி தலைவி ராணுவத்தால் வீட்டுக்காவலில்

யாங்கோன்,செப்.5


மியான்மர் நாட்டில் எதிர்க்கட்சித் தலைவி ஆன் சாங் சூகியும், அவரது ஆதரவுத் தலைவர்கள் சிலரும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.



ஆன் சாங் சூகி

அவர்களது தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவு இராணுவத்தினர் வீடுகளைச் சுற்றி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மற்றைய நாடுகளின் தூதர்கள் சூகியைச் சந்திப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் தலைநகரை விட்டு வெளியே செல்ல சூகியும், அவரது ஆதரவாளர்கள் சிலரும் முயன்ற போது ராணுவ ஆட்சியாளரால் தடுத்து நிறுத்தப்பட்டதும் அதனை எதிர்த்து தெரு ஓரத்தில் காரில் அமர்ந்து சூகி நடத்திய போராட்டம் வலுக்கட்டாயமாக பொலீஸாரால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதும் தெரிந்தவையே. (ஒ)



சமீபத்தில் சீனாவுக்கு விஜயம் செய்த ஜப்பானிய வெளியுறவுத்துறை அமைச்சர் யோபெய் கோனோ சீனப் பிரதமர் சூ ரொங்ஜியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது எடுத்தபடம். இந்தப் பேச்சின்போது சீன அரசின் கட்டுப்பாட்டில் உள்ள செய்தி ஊடகம் ஜப்பான் குறித்து வெளியிட்டு வந்த தவறான தகவல்களுக்கு சீனப் பிரதமரிடம் தமது ஆட்சேபணையை கோனோ தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## இன்று தொடங்கும் உச்சி மாநாட்டில்

# ஒலிம்பிக் போட்டியையொட்டி யுத்த நிறுத்தத்துக்கு அழைப்பு!

## உலக நாடுகளுக்கு ஐ.நா.சபை விடுக்கும்!!

வாஷிங்ரன்,செப்ரெம்பர்5

**அமெரிக்காவின் நியூயோர்க்நகரில் இன்று ஆரம்பமாகும் புத்தாயிரமாண்டின் முதலாவது ஐ.நா. சபை உச்சிமாநாட்டில் 'ஒலிம்பிக் யுத்த நிறுத்தம்' மேற்கொள்ளுமாறு உலக நாடுகள் அனைத்திற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட உள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், ரஷ்ய அதிபர் விளா டிமிர் புடின், ஆகியோர் உட்பட 188 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் புத்தாயிரமாண்டு ஐ.நா.உச்சி மாநாட்டில் ஒலிம்பிக் போட்டிக்காக அனைத்து நாடுகளிலும் யுத்த நிறுத்தங்கள் மேற்கொள்வதற்கு வேண்டுகோள் விடப்பட உள்ளதாக ஐ.நா.பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பண்டைய கிரேக்கத்தில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறும்போது, அண்மைப் பிரதேசங்களில் நடக்கும் மோதல் நிலைமைகள் நிறுத்தி வைக்கப்படுவது வழக்கம். இது 'ஒலிம்பிக் யுத்த நிறுத்தம்' என்று அழைக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற உள்ளதால் அந்தச் சமயத்தில் உலக நாடுகளில் இடம்பெறும் யுத்த மோதல்களை நிறுத்தி வைக்க ஐ.நா.சபையால் வேண்டுகோள் விடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ஒ)

## அமெரிக்கா ஆலோசனை!

புதுடில்லி,செப்.5

பாகிஸ்தானிலிருந்து செயற்பட்டுவரும் காஷ்மீர் தீவிரவாத இயக்கங்கள் சிலவற்றை பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்க அமெரிக்கா ஆலோசித்து வருவதாக இந்தியப் பிரதமரின் முதன்மை ஆலோசகர் பிரிஜேஷ் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அமெரிக்கா செல்லும் போது அதிபர் கிளின்ரனுடன் இது தொடர்பாக பேச்சு நடத்துவார் என்றும் மிஸ்ரா மேலும் தெரிவித்துள்ளார். (ஒ)

உலக அரங்கில்

## 'ஒஸ்டான் கினோ' தீ விபத்தால்

# ரஷ்ய தொலைக்காட்சி நிறுத்தம்: மக்களின் மனநிலை பாதிப்பு!

மொஸ்கோ,செப்.5

ரஷ்யாவின் 'ஒஸ்டான்கினோ' தொலைக்காட்சிக் கோபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் மொஸ்கோ நகரத்திற்கான தொலைக்காட்சிச் சேவைகள் முற்றாக நிறுத்தப்பட்டு விட்டன. இவற்றை மீண்டும் ஆரம்பிக்க பல மாதங்களாகும் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனால் 10 மில்லியன் மக்கள் உளவியல் ரீதியாக பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான மொஸ்கோ வாசிகளுக்கு இருந்த ஒரே ஒரு பொழுது போக்கான தொலைக்காட்சிச சேவைகள் நிறுத்தப்பட்டதால் நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று உளவியலாளர்கள் எச்சரித்துள்ளனர். ரஷ்ய அணு ஆயுத நீர்மூழ்கி விபத்துக்குள்ளாகி 118 கடற்படை மாலுமிகள் உயிரிழந்த சோகத்தினால் மக்களின் மனநிலை பாதிக்கப்படாமல் காப் பாற்றியதில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெரும் பங்கு வகித்ததாகவும் -

அதுவும் தீ வியத்தால் நிறுத்தப்பட்டதால் மனஅழுத்தம், பதற்றம் ஆகிய உளரீதியான தாக்கங்களுக்கு மொஸ்கோ மக்கள் ஆட்பட நேரிடலாம் என்று அஞ்சப்படுவதாகவும் கூறப்படுகிறது.

முன்னாள் வல்லரசான ரஷ்யா, தற்போது பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியுள்ளதால் பெரும்பாலான மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர்.

எனவே அவர்களுக்கு அதிக செலவில்லாத பொழுதுபோக்கு தொலைக்காட்சி பார்ப்பதே ஆகும்.

குறிப்பாக பணியிலிருந்து இளைப்பாறிய முதியவர்களின் தனிமையைப் போக்கும் சாதனமாக இருந்து வந்த தொலைக்காட்சி சேவைகள் தடைப்பட்டதால், அவர்கள் விரக்தி நிலையை அடையும் அபாயம் தோற்றியுள்ளது என்று அஞ்சப்படுகிறது. (ஒ)

# மத்திய, மாநில ஆளும் கட்சிகளுடன் இந்திய தேர்தல் ஆணையம் மோதல்

புதுடில்லி,செப்.5

அரசியல்கட்சிகளுக்கான நன்னடத்தை நெறிமுறைகள் குறித்து இந்தியாவில் தேர்தல் ஆணையத்துக்கும் மத்திய, மாநில அரசுகளுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.

தேர்தல் திகதி அறிவித்த பின்னர், மத்திய, மாநில அரசுகள் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் திட்டங்களை அறிவிப்பதை தடை செய்ய வேண்டும் என்றும் இதன் மூலம் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கு மற்றய வேட்பாளர்களை விட அதிக அனுகூலங்கள் கிடைக்காமலிருக்கும் என்றும் தேர்தல் ஆணையம் வாதிட்டு வருகிறது. ஆனால் இதனை ஆட்சிக்கு வ[illegible] வாய்ப்புள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்த்து வருகின்றன.

தேர்தல் அறிக்கை வெளியிடு திகதியில் இருந்தே நன்னடத்தை விதிகள் அமுலுக்கு வர வேண்டும் என்று அவை கூறி வருகின்றன.

தேர்தல் அறிக்கையை தத்தமது வசதிக்கு ஏற்ப கட்சிகள் தேர்தல் திகதிக்கு முதல் நாள் கூட வெளியிட முடியும் என்பதால் இது நடைமுறைக்கு ஒத்துவராது என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

# இயலாமையை மறைக்கவே தமிழக அரசு என்மீது வழக்கு!

## ஜெயலலிதா குற்றச்சாட்டு!

சென்னை,செப்.5

நடிகர் ராஜ்குமார் உட்பட 4 பேரையும் விடுவிக்கத் தவறிய தமிழகஅரசு அந்தத் திறமையின்மையை மறைப்பதற்காக தன் மீது புதிய வழக்கைத் தொடுத்து மக்களின் கவனத்தை திசை திருப்ப முயற்சிப்பதாக ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒரு ஊழல் வழக்கில் நீதிமன்றத்துக்கு வந்து குற்றப்பத்திரிகையை பெற்றுக்கொண்ட ஜெயலலிதா செய்தியாளர்களிடம் மேற்கண்ட குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

வீரப்பனால் ராஜ்குமார் கடத்தப்பட்டு 36நாள்களாகியும் தமிழகஅரசு இதுவரை அவரை விடுவிக்க பயனுள்ள நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்றும் -

முன்னரே வருமானத்துக்கு மீறிச் சொத்துச் சேர்த்த வழக்கு தொடரப்பட்டுள்ள போதிலும் அதே பிரிவில் தற்போது லண்டனில் ஹோட்டல்கள் வாங்கிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டது சட்டப்படி தவறு என்றும் ஜெயலலிதா கூறினார். (ஒ)

# பலஸ்தீனர்களின் வீடுகளை இஸ்ரேலியர்கள் இடித்தனர்!

காசா,செப்.5

கிழக்கு ஜெருசலேமில் கட்டப்பட்டிருந்த பலஸ்தீனர்களின் வீடுகள் பலவற்றை இஸ்ரேல் அதிகாரிகள் இடித்துத் தள்ளினார்கள்.

இந்தக் குடியிருப்புக் கட்டடங்கள் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டிருந்ததாகவும், அந்தப்பிரதேச நிர்வாகத்தினரிடம் அவற்றுக்கு அனுமதி பெறப்படவில்லை என்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய அதிகாரிகள் வீடுகளை இடித்து போது பலஸ்தீனியர்கள் கடுமையான முறையில் எதிர்புத் தெரிவித்ததாகவும் -

அதனை இஸ்ரேலிய அதிகாரிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் உறுதிசெய்யப்படாத தகவல்கள் தெரிவித்தன. (ஒ)

'ஒன்றாய் இன்றும் நாமில்லையேல்
விடுதலை என்றும் எமக்கில்லை' -
செயலதிபர், க.உமாமகேஸ்வரன்
ஒற்றுமையை வளர்த்திட அதன் சின்னமாய் விளங்கும்
எம்மை ஆதரித்திடுவீர்!

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம்
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட் + ஈரோஸ்)
X
(C/1281)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி கணேஸ் சித்திராதேவி

தோற்றம் 05 03-1952 — மறைவு 05-09-1999

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும்
கிருபையும் என்னைத்தொடரும்.
நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த
நாள்களாய் நிலைத்திருப்பேன்.
-- சங்கீதம் 23:6

இன்று (05—09—2000) எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலிப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐ. கணேஸ் (லிபியா),
க. அமுதா, சுபிதா,
க. பிரிந்தா,
M. பாலசந்திரன் (சந்திரன்),
சந்திரவதனி.
தச்சுத் தொழிற்சாலை, திருநெல்வேலி.

142, கிராம விஸ்திகரிப்புத் திட்டம்,
திருநெல்வேலி.
(78001)

# சந்நிதியான் ஆலய உற்சவ விசேட நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப் 5
தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் விசேட நிகழ்வுகளில்

இன்று செவ்வாய்க்கிழமை 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற தலைப்பில் கு. வேலாயுதம் வழங்கும் சொற்பொழிவர் —

நாளை புதன்கிழமை 'ஞான மொழி பேசு முகம்' எனும் பொருளில் அருட்கவி சி. விநாசித்தம்பி நிகழ்த்தும் சொற்பொழிவும் —

நாளை மறுதினம் வியாழக்கிழமை நல்லை ஆதீன முதல்வரின் அருளுரையும்—

இடம்பெறவுள்ளன.

(ச-173-30)

# அபிவிருத்தி உதவியாளருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், செப் 5
யாழ். மாவட்டத்திலுள்ள பட்டதாரி அபிவிருத்தி உதவியாளர்கள் 25 பேருக்கு வெகு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக வடக்கு — கிழக்கு மாகாண பொது நிர்வாக கூட்டுறவு, வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் க. பரமலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்களான பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் கடமையாற்றும் 10பட்டதாரி அபிவிருத்தி உதவியாளர்கள் தரமுயர்த்தப்பட்டு உள்ளூராட்சி உதவியாளராக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-15)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நாகலிங்கம் மகாதேவன்

(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்)

தோற்றம் 25 - 05 - 1945 — மறைவு 05 - 09 - 1999

ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொள்ளும் அப்பாவே!
உங்கள் பிரிவால் வாடி வதங்குகின்றோம்
அணையாத் தீபமாய் காட்சி கொடுக்கின்றீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
தாயார், உறவினர்கள்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(78008)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி சிவசம்பு சுந்தரம்

(சுந்தராச்சி)

உதிர்வு: 06—08—2000

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து
வையகத்தில் வாழ்வாங்கு வாழ நல்வழி காட்டிய
எம் அருமைத் தாயே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு
எம்மை விட்டு என்றும் அகலாது.

தங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (05 — 09 — 2000) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகள், மகன்மார்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

...ர்த்தியான் கூடல்.
...ன்னாகம் மத்தி,
...ன்னாகம்.
(77999)


# கேள்வி விளம்பரம்

## நகராட்சி மன்றம்,

பருத்தித்துறை.

## அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைப்பு வேலைகள்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் இந்நகராட்சி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்/ஒப்பந்தகாரர். அரச நிறுவனங்களில் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து உரிய கேள்வி வைப்புப் பணம், கேள்விப்பத்திரப் பணம் செலுத்துவதன் பேரில் 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்பு பதிவு அஞ்சல் மூலமோ அல்லது கேள்விப் பெட்டியிலோ ஒப்படைத்தல் வேண்டும். கேள்விக்கான கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும் கேள்விப் பத்திரங்கள் 2000 செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனை செய்யப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

காரணம் ஏதும் கொடுக்காமல் எந்தவொரு கேள்வி வைப்பும் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு

| | வேலையின் பெயர் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | வல்லிபுரம் வைத்தியர் வீதி | 250/- | 2000/- |
| 02. | மூன்றாம் குறுக்குத் தெரு | 250/- | 1500/- |
| 03. | வல்லிபுரம் அரசடி வீதி | 250/- | 3000/- |
| 04. | பிள்ளையார் கோயில் வீதி | 250/- | 2000/- |
| 05. | திகிரி வீதி | 250/- | 1750/- |
| 06. | புனித அந்தோனியார் வீதி | 250/- | 1750/- |
| 07. | இரண்டாம் வீதி | 250/- | 2000/- |
| 08. | மணல் வீதி | 250/- | 2000/- |
| 09. | கந்த உடையார் வீதி | 250/- | 1500/- |
| 10. | ஐயனார் கலட்டி வீதி | 250/- | 2000/- |
| 11. | வடிகால் எல்லைச் சுவர் அமைப்பு வேலை | 250/- | 2500/- |

அ. வின்சன்கெனடி
தலைவர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
28—08—2000
(சி/ 12809)

உதயன்

## தேர்தல் காலத்துத் தணிக்கை!

நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் ஆறு வாரங்கள் உள்ளன. இந்த வேளையில் இலங்கையில் உள்ள எல்லாப் பத்திரிகையாளர்களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் - ஆயுதப் படை அதிகாரிகளின் நடத்தை, அவர்களின் நியமனங்கள்- மற்றும் போர் நிலைமை உட்பட்ட விடயாங்கள் குறித்த சுதந்திரமாகவும் பின்விளைவுகள் குறித்த அச்சம் இன்றியும் விமர்சிக்கும் உரிமை இருப்பது அவசியம். ஆகையால் இப்போது நடைமுறையில் உள்ள செய்தித் தணிக்கையை உடனடியாக நீக்க வேண்டும்.

பத்திரிகையாளரைப் பாதுகாக்கும் குழு (சி.பி.ஜே), ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்த அவசர வேண்டுகோளில் இவ்வாறு கேட்டுள்ளது. நியுயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்டு பத்திரிகைச் சுதந்திரத்துக்காகச் செயற்படும் பக்கச் சார்பற்ற நிறுவனம் இது.

ஓகஸ்ட் நடுப்பகுதியில் செய்தித் தணிக்கை நீக்கப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர முன்னர் வாக்குறுதி அளித்தவாறு, செயற்படவில்லை என்பதனையும் அதிருப்தியுடன் சி.பி.ஜே சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் செய்தித் தணிக்கைக்குரிய தகுதி வாய்ந்த அதிகாரி ஆரிய ரூபசிங்க கொழும்பில் இருந்து வெளிவரும் மொத்தம் ஐந்து சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளை எச்சரித்துக் கடிதங்கள் எழுதியிருப்பது குறித்தும் பத்திரிகையாளரைப் பாதுகாக்கும் குழு கண்டனம் தெரிவித்துள்ளது. புதிய இராணுவத் தளபதியினர் நியமனம் குறித்து நிலவிய சர்ச்சை குறித்து எழுதியமைக்காகவே அந்தப் பத்திரிகைகள் ஐந்தும் தகுதிவாய்ந்த அதிகாரியால் எச்சரிக்கப்பட்டன.

இதனைச் சுட்டிக்காட்டி, இராணுவ அதிகாரிகளின் விவகாரங்களை தேர்தல் காலத்தில் விமர்சிப்பதற்கு பத்திரிகையாளருக்கு எழுத்துச் சுதந்திரம் தேவை என்றும் சி.பி.ஜே. வலியுறுத்தி உள்ளது.

மேலும் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் செய்தித் தணிக்கை சம்பந்தமாக நடைமுறையில் உள்ள விதி, தணிக்கை அதிகாரிக்கு அளவுக்கு அதிகமான - அவர் நினைத்தவாறு செய்வதற்கு - அதிகாரம் அளிக்கும் வகையில் மிகப் பரந்த அளவிலும், எல்லை விதிக்காத சொற்றொடர்களைக் கொண்டதாகவும் உள்ளதாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

மொத்தத்தில் தேர்தல் நடைபெறும் வேளையில் செய்திகளுக்குத் தணிக்கை கொண்டுவந்திருப்பது எந்த வகையிலும் நியாயப்படுத்தக் கூடியது அல்ல. செய்தித் தணிக்கை விதிக்கப்பட்டுள்ள எந்தவொரு நாட்டிலும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவது என்பது இயலாத காரியம்.

ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களில் தேர்தலும் ஒன்றாகும். மக்கள் தமக்கு விரும்பியவர்களைச் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் பின்விளைவுகள் குறித்து பயமின்றியும், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு வசதி செய்யப்படவேண்டும். அதுவே உண்மையான ஜனநாயகத் தேர்தலாகும்.

மக்களில் பலருக்கு தேர்தலுக்கு முந்திய காலவேளையில் அரசியல்வாதிகள் குறித்தோ அரசியல் குறித்தோ ஆர்வமும் அக்கறையும் குறைவு. தேர்தல் ஒன்று வரப்போகிறது என்றதுமே, தமது வாக்குரிமையைத் பயன்படுத்தும் காலத்திலேயே முன்கண்டவற்றில் ஆர்வம் பிறப்பதுண்டு. அந்த வேளையில் செய்தித் தணிக்கையை விதித்துக் கொண்டு நியாயமான, நீதியான தேர்தல் நடத்துவதாகக் கூறுவது எந்த வகையிலும் ஏற்கக் கூடியதல்ல; சாத்தியமானதும் அல்ல. சுத்த அபத்தமாகும்.

பத்திரிகை ஆசிரியர்கள் சுய தணிக்கை செய்யலாம்என்பது சர்ச்சைக்குரிய பிரச்சினைக்குரிய விடயங்களை தணிக்கை அதிகாரி எப்படி நோக்குவார் என்பதனை ஊகிக்க வேண்டிய சிரமமான பொறுப்பைத் திணித்துள்ளது. தணிக்கை விதிக்கு உட்படாமல் வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்ட சுய தணிக்கை வேறு.

ஆகையால் சுதந்திரமான, நியாயமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு செய்தித் தணிக்கை உடனடியாக நீக்கப்படவேண்டும். அதுவே உண்மையான ஜனநாயகம்.

### பொன் விழா

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்.பல்கலைக்கழக வர்த்தகத் துறைத் தலைவர் க.தேவராஜாவின் ஐம்பதாவது அகவை ஒட்டிய பொன் விழா ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலில் கொண்டாடப்படவுள்ளது.

இந்த விழாவையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்காக யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கத்தை தலைவராகக் கொண்டு பொன்விழாச் சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (க)

### பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

வலி.வடக்கு,செப்.5

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சகல கிராம அலுவலர் பிரிவு பங்கீட்டு அட்டைகளும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து வேறு பிரதேச செயலாளர் பிரிவுக்கு இடம்பெயர்ந்துள்ளவர்களின் பங்கீட்டு அட்டைகளின் மீளாய்வு உடனடியாக நடைபெற மாட்டாது என்றும் -

நல்லூர் பிரதேசசெயலாளர் பிரிவில் இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ளவர்களின் பங்கீட்டு அட்டைகள்யாவும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும் எனவும் -

கிராம அலுவலர்கள் தெரிவித்தனர். (ஐ-86-ரி)

### இரு வீடுகளில் திருட்டு

ஒரே இரவில் இரண்டு வீடுகளில் சங்கிலி திருடப்பட்ட சம்பவம் சங்கானை பழைய தபால் கந்தோர் வீதியில் இடம்பெற்றுள்ளது. (ஐ-29)

# ஐ.தே.கவுக்கும், தமிழர் கூட்டணிக்கும் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு!

## சு.கட்சியின் புதிய செயலர் கூறுகிறார்

கொழும்பு, செப்.5

**ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்புடையவை என்று சமுர்த்தி, இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவியேற்றுள்ள அமைச்சர் திஸநாயக்க நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்துக்குச் சுபநேரத்தில் சென்று கடமையைப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான முறையில் சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் அனைத்தும் மீளமைக்கப்படும். கடந்த காலங்களில் கட்சி இழைத்த தவறுகளும் இன்றைய இனநெருக்கடிக்கும் பயங்கரவாதப் பிரச்சினைக்கும் ஒருவகையில் காரணம் - என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் திஸநாயக்க மேலும் தெரிவித்ததாவது:

பொதுத்தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இலகுவாக வெற்றிகொள்ளும். தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட புலிகளுக்கு நெருக்கமான அமைப்புகளை நாம் தேர்தலில் மிக இலகுவாகத் தோற்கடிப்போம்.

அம்பாறை மாவட்டத்தில் எம்முடன் இணைந்து போட்டியிடும் முஸ்லீம் காங்கிரஸின் ஆதரவுடன் நாம் அதிக ஆசனங்களைக் கைப்பற்றுவோம். வடக்கில் ஈ.பி.டி.பி கட்சிக்கு அரசாங்கம் தமது பூரண ஆதரவை வழங்கும்.

முறைகேடுகள் மூலமாகவோ, வன்முறைகள் மூலமாகவோ தேர்தலை வெற்றி கொள்ள வேண்டிய அவசியம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கிடையாது. அதே நேரம் அரசாங்கம் எமது கையில் இருக்கும் போது எமது ஆதரவாளர்களை அச்சுறுத்தி வாக்குப் பெறும் முயற்சியில் ஐ.தே.க.ஈடுபடுமானால் அது பாரதூரமான விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

தேர்தல் வன்செயல்களில் எமது கட்சி ஆதரவாளர்கள் எவருக்கேனும் பொருளாதார இழப்பு ஏதும் ஏற்படும் பட்சத்தில் அதற்கான நஷ்டஈடுகள் உடனடியாகப் பெற்றுக் கொடுக்கப்படும்.

சகல இனமக்களுக்கும் அமைதியாக வாழக்கூடிய ஒரு சூழலை இந்த நாட்டில் உருவாக்கவே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

புலிகள் இயக்கமும் பிரபாகரனும் யுத்த ரீதியில் தோற்கடிக்கப் படுவார்கள். அதற்குத் தேவையான நவீன ஆயுதங்களை அரசாங்கம் போதுமான அளவு கொள்வனவு செய்துள்ளது.'

நாம் நாடாளுமன்றத்தில் இறுதியாக நிறைவேற்றிய குறை நிரப்புப் பிரேரணை மூலம் கூட யுத்தத்துக்காக 3 ஆயிரம் கோடி ரூபாவைப் பெற்றுக் கொண்டோம் - என்றார்.

இந்த வைபவத்தில் அமைச்சர் அலவி மௌலான உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ-6)

# திருமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோனால் கூட்டணியே பொறுப்பு!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

கொழும்பு,செப்.5

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனால் அதற்கான முழுப்பொறுப்பையும் தமிழர் விடுதலைக் கூட்டணியே ஏற்க வேண்டும்.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை,அம்பாறை மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் பேணப்பட வேண்டும் என்பதற்காகவே மேற்படி மாவட்டங்களில் தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைத்து ஒரே சின்னத்தில் போட்டியிட பொது அமைப்புக்கள் முயற்சி எடுத்தன. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியோ அதனை முற்று முழுதாக மறுத்து விட்டது. இதனால் ஆரம்பத்தில் ஒருபொது அமைப்பை உருவாக்க முன்வந்த சில தமிழ் அரசியல் கட்சிகளும் மீண்டும் தாம் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளன.

எனவே திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் ஒன்று இல்லாமல் போவதற்கு நாங்களும் உடந்தையாக இருக்க மாட்டோம்.

தமிழரின் தாயகம் வடக்கு - கிழக்கு மாகாணம். எனவே அவை நிரந்தரமாக இணைக்கப்பட்டு தமிழர் சுயாட்சிப் பிரதேசம் உருவாக்கப்பட வேண்டும் எனக் கூறிக் கொள்ளும் தமிழ்க் கட்சிகள் அம்மண்ணின் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாமல் போவதற்கான - தான்தோன்றித்தனமான செயலில் வெற்றி கண்டுள்ளன. இதன் மூலம் மீண்டும் வடக்கு - கிழக்கின் தலைநகரான திருமலையில் சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் கரத்தைப் பலப்படுத்தி உள்ளார்கள். இதற்கு நாமும் காரணகர்த்தாக்களாக இருக்க விரும்பவில்லை. என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

(ஐ-7)

### உயிரிழந்த புலிகளின் விவரம்

வவுனியா,செப்.5

கடந்த வெள்ளிக்கிழமை கனகன் புளியடிப்பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் ஐவர் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. அவர்களின் விவரம் வருமாறு:-

★ கப்டன் அருள்யோகன் (மாரிமுத்து யேசுராசா - கிளிநொச்சி)

★ செழிஅமுதன் (இராமநாதன் தினேஷ் - வவுனியா)

★ தர்மினி (தெய்வேந்திரம் தேவகி - மன்னார்)

★ அனுசியா (நாகராசா குமுதினி - யாழ்ப்பாணம்)

★ விகுதினி (கோபால சுந்தரம் நந்தினி - மன்னார்) (க)

**உதயவாக்கு**

**இன்பத்தை அநுபவிப்பதாக நினைக்கும் மனிதன், அதற்கு தான் அடிமைப்படுவதை உணருவதில்லை.**

*- பெஞ்சமின் பிராங்கிளின்*

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடாது!

## அந்நாட்டு தூதர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.5

இலங்கையின் பிரச்சினைகளில் இந்தியா ஒருபோதும் தலையிடாது; ஆனால் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கு அது ஒத்துழைப்பு வழங்கும்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அண்மையில் பதவியேற்ற கோபால்கிருஷ்ணன்காந்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய உடகம புத்தரகித சித்திரபால தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்தியத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்கு அனைவரும் நம்பிக்கையையும், பொறுமையையும் கடைபிடிக்க வேண்டும். இதன் மூலமே நிரந்திரமான தீர்வை ஏற்படுத்திக் கொள்ள முடியும் எனவும் - இந்தியத்தூதுவர் தெரிவித்தார். (ஐ-7)

# ராஜீவ் காந்தியை தாக்கியவர் 'சிஹல உறுமய'வில் போட்டி!

கொழும்பு,செப்.5

1987ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கிய கடற்படை வீரர் விஜயமுனி றோகண எதிர்வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் 'சிஹல உறுமய' கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் இக்கட்சி அதன் தலைவர் எஸ்.எல். குணசேகர தலைமையில் போட்டியிடவுள்ளது. இந்த வேட்பாளர் பட்டியலை 'சிஹல உறுமய' கடந்த சனிக்கிழமை கொழும்பு செயலகத்தில் தாக்கல் செய்தது.

ராஜீவ் காந்தியைத் தாக்கியமைக்காக விஜயமுனி றோகண இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பத்து வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் 1990 இல் அப்போதைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா இவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

1994 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவர் சிங்கள மகா சம்பத பூமிபுத்ர கட்சியின் சார்பில் போட்டியிட்ட போதும், 70க்கும் குறைவான வாக்குகளையே பெற்றார். பின்னர் இக்கட்சிக்குள் எழுந்த முரண்பாடுகளால் அதிலிருந்து விலகி 'சிஹல உறுமய'வில் இணைந்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளார். (க-6)

# ஜே.வி.பியின் 5 ஆண்டு திட்டம் மகாநாயக்கரிடம் கையளிப்பு!

கொழும்பு,செப்.5

ஜே.வி.பி. அமைப்பின் தலைவர்களான நந்தன குணதிலக மற்றும் அனுரா குமர திஸநாயக்க ஆகியோர் கடந்த சனிக்கிழமை சியாம் நிக்காயாவின் மல்வத்த பீடாதிபதியான ரம்புக்கலை ஸ்ரீ விபசி தேரரைச் சந்தித்து தமது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல்களைக் கையளித்தனர்.

ஜே.வி.பி. அமைப்பின் அரசியல் நடவடிக்கைகளை 1994 இன் பின்னர் தொடர்ந்து அவதானித்து வருவதாகவும் -

அமைதியான வழியில் அந்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்-

பீடாதிபதி அவர்களிடம் கேட்டுக் கொண்டார். ஜே.வி.பி தலைவர்கள் நேற்று அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்திக்க இருந்தனர். (ஐ-6-20-186)

**நாளை**

**ஆவணி 21**

**புதன்கிழமை**

*திதி:* அட்டமி

பிற்பகல் 1.51 வரை

*நட்சத்திரம்:* கேட்டை

முன்னிரவு 10.07 வரை

*சுபநேரம்:* 4.34 - 6.04

*ராகுகாலம்:* 12.04 - 1.34

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# பொறியியல் பிரிவுக்கு புதிய தளபதி நியமனம்

கொழும்பு,செப்.5

ஸ்ரீலங்கா இராணுவத்தின் பொறியியல் சேவைப்பிரிவின் தளபதியாக பிரிகேடியர் எம்,ஆர்.டபிள்யூ.டி. சொய்ஸா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அண்மையில் ஓய்வுபெற்றுச் சென்ற பிரிகேடியர் கே.டீ.ஏ.பெரேராவின் வெற்றிடத்திற்கே இவர் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 1956இல் பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் மூத்த அமைச்சராக இருந்த எம்.பி.டி சொய்ஸாவின் மகன் ஆவார்.

(ஐ-6-20-186)

# யுத்த நிறுத்தம், பயனளிக்கும் சமரசப் பேச்சு இவையே இன்றைய அவசரத் தேவைகள்

## வலியுறுத்துகின்றது ஆயர் பேரவை

**இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் மூன்று நாள் மாநாடு கடந்த 22, 23,24ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றது.**

**மாநாட்டின் முடிவில் ஆயர் பேரவையால் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த மாநாடு குறித்த தகவல்களும் அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களும் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.**

இலங்கை 11ஆவது பொதுத் தேர்தலை எதிர்நோக்கியுள்ள வேளையில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை கடந்தமாத இறுதிப் பகுதியில் கொழும்பில் கூடியது. மூன்று நாள்களாக நடைபெற்ற மேற்படி பேரவையில் இலங்கையின் எல்லா மறைமாவட்ட ஆயர்களும் கலந்துகொண்டனர். இறுதித் தினமான ஓகஸ்ட் 24ஆம் திகதி அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டனர்.

முடிவற்ற நீண்ட இனப்போர் ஒருபுறமிருக்க தேர்தல்கள் நெருங்கியுள்ள நிலையில், இவர்களது இந்த அறிக்கை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. போர்க்களத்தையும் தேர்தல்களத்தையும் மனதிலே கொண்டு இவர்கள் இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. போரிடும் தரப்பினருக்கிடையில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை ஒருபுறம் வலியுறுத்துகின்ற வேளையில் மறுபுறம் சமாதானத்துக்கு வர்க்களிக்கும்படி அவர்கள் அழைப்பு விடுத்திருப்பது இங்கு நோக்கத்தக்கது. இலங்கைக் கத்தோலிக்க ஆயர் சங்கத் தலைவர் மேதகு ஒஸ்வெல்ட் கோமீஸ் ஆண்டகையும் செயலாளர் நாயகம் மேதகு மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள இவ்வறிக்கை பற்றி ஆய்வு செய்ய முன்னர் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை பற்றிய விளக்கத்தை இக் கட்டுரையில் முதலில் தர விரும்புகிறேன்.

### இலங்கையின் மறை மாவட்டங்களும் ஆயர்களும்

இலங்கையில் தமிழர்களையும், சிங்களவர்களையும் கத்தோலிக்க மதம் இணைக்கின்ற பாலமாக இருக்கின்றது. இலங்கையின் கத்தோலிக்க பிரதேசங்கள் - கொழும்பு மறை மாவட்டம், கண்டிமறை மாவட்டம், காலி மறை மாவட்டம், சிலாபம் மறை மாவட்டம், பதுளை மறை மாவட்டம், குருநாகல் மறை மாவட்டம் , இரத்தினபுரி மறை மாவட்டம், அனுராதபுர மறை மாவட்டம், திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டம், யாழ்ப்பாண மறை மாவட்டம், மன்னார் மறை மாவட்டம் என 11 மறை மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு "மாமறைமாவட்டம்" **(Arch Diocese)** என அழைக்கப்படும் கொழும்பு ஆயர் பேராயர் **(Arch Bishop)** என அழைக்கப்படுகிறார். இவ்வாறு அழைக்கப்படுவதனால் நடைமுறை அமைப்புக்களில் அதிகார ரீதியாக கொழும்பு பேராயர் மற்றைய ஆயர்கள் மேல் அதிகாரம் செலுத்துவதில்லை. இந்த 11 மறை மாவட்டங்களுள் யாழ்ப்பாணம், திருகோணமலை - மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மூன்றுமே தமிழ் மறை மாவட்டங்களாக உள்ளன. கொழும்பு, கண்டி, பதுளை, இரத்தினபுரி போன்ற இடங்களில் தமிழ்க் கத்தோலிக்கர்கள் வாழ்ந்து வந்தாலும் அவை தமிழ் மறை மாவட்டங்களாக கணிக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் ஓர் ஆயர் பொறுப்பாக இருக்கிறார். அவர்கள் முறையே கொழும்பு மறை மாவட்டம் - மேதகு நீக்களஸ் மார்க்கஸ் பெர்ணான்டோ, கண்டி மறை மாவட்டம் - மேதகு வியன்னி பெர்ணான்டோ, காலி மறை மாவட்டம் - மேதகு எல்மோ பெரேரா, சிலாபம் மறை மாவட்டம் - மேதகு பிராங் மார்க்கஸ் பெர்ணான்டோ, பதுளை மறை மாவட்டம் - மேதகு வின்ஸ்ரன் பெர்ணான்டோ, குருநாகல் மறை மாவட்டம் - மேதகு றேமன் பீரிஸ், இரத்தினபுரி மறை மாவட்டம் - மேதகு மல்கம் ரஞ்சித், அனுராதபுரமறை மாவட்டம் - மேதகு ஒஸ்வல் கோமீஸ், திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டம் - மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, யாழ்ப்பாணமறை மாவட்டம் - மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் மறைமாவட்டம் - மேதகு இராயப்பு ஜோசப் ஆவர். உலக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் 2 ஆவது அருள் சின்னப்பர் பாப்பரசருடைய பிரதிநிதியாக மேதகு தோமஸ் யங்செங்னான் ஆண்டகை கொழும்பில் தங்கி மறை மாவட்ட ஆயர்களுடைய பணிக்கு உறுதியும் ஊக்கமும் கொடுத்து வருகின்றார்.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையில் 8 சிங்கள ஆயர்களும், 3 தமிழ் ஆயர்களும் இணைந்து செயற்படுகின்றனர். ஒருநாட்டில் ஒரு கத்தோலிக்க ஆயர் சங்கம் மட்டும் இயங்கிவருவதும் அவர்களுக்கு பாப்பரசரின் பிரதிநிதி உறுதியாக இருப்பதும் வழமையாக இருக்கிறது. பெரிய நாடுகளில் பிரதேச ஆயர்களின் அவைக்கு அனுமதி உண்டு. 1983ஆம் ஆண்டு இனப்பிரச்சினையின் உச்சக் கட்டத்தில் "தமிழ் பிரதேச ஆயர்கள் அவை" ஒன்றினை உருவாக்க வேண்டுமென பலர் விரும்பினர். அதேவேளை தமிழ் பேராயர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கருத்தும் சிலரால் முன்வைக்கப்பட்டாலும் அது உரிய நேரமல்ல, எனக் கைவிடப்பட்டது.

தமிழ் - சிங்கள ஆயர்கள் இணைந்த இப்பேரவை அரசியலில் ஒருபோதும் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், காலத்துக்குக் காலம் அரசியலின் போக்கு, நடைமுறைகள் பற்றிய தமது எண்ணக் கருக்களையும், அறிக்கைகளையும் வெளியிட்டுக் கொண்டே வந்திருக்கின்றன. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அவர்களின் ஆட்சிமுறை எப்படி அமைந்தாலும், சாதக - பாதக நிலைமைகளை கவனத்திற் கொள்ளாது "உலகின் உப்பாகவும், ஒளியாகவும் திகழ வேண்டும்" என்ற நிலையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கம் தமது அறிக்கைகள் மூலமாக தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டே வந்திருக்கின்றது.

சிறுபான்மையினராக இருந்தாலும் தமக்குள்ள தேசிய, சர்வதேச நிறுவனத் தன்மையையும், வலைப்பின்னலையும் **(Network)** முடிந்தளவு பயன்படுத்தி வருகின்றனர். இனப்பிரச்சினை பற்றி தமக்கிடையே கருத்து முரண்பாடுகளை கொண்டிருந்தாலும் தமிழ் மக்களுக்கு நீண்டகாலப் பிரச்சினைகள்உண்டு. அவை ஐக்கிய இலங்கையினுள்ளே அரசியல் ரீதியாக நீதியாகவும், நிரந்தரமாகவும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படவேண்டும் என்பதில் எல்லோரும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர். 1985 ஆம் ஆண்டு இனப்பிரச்சினை சார்பாக இவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்குறிப்பிட்ட கருத்தினை தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. 1985 ஆம் ஆண்டின் பின்னர் வெளிவந்துள்ள அறிக்கைகளில் தமிழர்கள் மட்டில் அவர்கள் கொண்டுள்ள கனிவும், கரிசனையும் ஓரளவென்றாலும் வெளிப்படையாகக் காட்டப்பட்டுள்ளன. இதற்கு தமிழ் ஆயர்களுடைய அழுத்தம் ஒரு காரணமாக இருக்கலாம்.

தமிழ்க் கத்தோலிக்க பகுதியினர் சிலர், சிங்களக் கத்தோலிக்க மதத் தலைவர்கள் தமிழ் மக்கள் மட்டில் காட்டிய கரிசனையும் கொடுத்த அழுத்தமும் போதாது என்றும் - மிகவும் குறைவானது என்றும் - ஒருபக்கம் சார்பானது என்றும் குறைப்படுவதை இங்கு என்னால் குறிப்பிடாமல் விடமுடியாது. தமிழ் மக்கள்மேல் அநியாயப் போர் தொடுக்கப்பட்ட போதும், பேரழிவுகள் தொடரப்பட்ட போதும், ஆலயங்கள் குண்டு வீசி அழிக்கப்பட்ட போதும், உடனடியாகக் கண்டனக் குரல்களைக் கொடுத்து அரசிற்கு அழுத்தம் கொடுக்கவில்லையென்பது இவர்களின் வாதமாக இருக்கின்றது.

இந்தப் பின்னணியுடன் ஆயர்கள் பேரவையில் அறிக்கையினை நோக்குவது பொருத்தமாக இருக்கும். "கத்தோலிக்க ஆயர்களின் சமாதானத்திற்கான அழைப்பு" எனத் தலையங்கமிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கையின் முதற்பகுதி நாட்டின் வடகிழக்குப் பிரதேசத்தில் நடைபெறும் போரையும், அதன் தாக்கங்களையும், விளைவுகளையும் தெரிவிக்கின்றது. அதேவேளை நாம் எதிர்நோக்கியுள்ள பொதுத் தேர்தலையும் குறித்து கருத்து வெளியிட்டுள்ளது. இரண்டாவது பகுதியிலே "நாம் உறுதிப்படுத்துகின்ற கருத்துக்கள்" இவை என 12 கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### அறிக்கையின் முதலாம் பகுதி

எமது அன்புக்குரிய இலங்கை மண்ணின் சரித்திரத்தில், முக்கியமான இன்றைய நிலையில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அங்கத்தவர்களாகிய நாம் எமது ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் வழிகாட்டுதலிலும், ஊக்குவிப்பிலும் உந்தப்பட்டு "உலகின் உப்பாகவும் ஒளியாகவும் திகழ வேண்டும்" என்ற நிலையில் எமது கருத்துக்களை கத்தோலிக்க மக்களுடனும் நல்மனம் படைத்த எல்லா மக்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம் என அறிக்கை ஆரம்பிக்கிறது.

*வண.பிதா ரூபன் மரியாம்பிள்ளை*

வடக்கு - கிழக்கில் நடைபெறும் போரினாலும் அதன் அழிவுகள், இறப்புக்கள், பொருளாதாரத் தாக்கங்களினால், இலங்கை எதிர்பாராத பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது. அத்தோடு அதைவிட அதிகமாக கிறிஸ்தவ வாழ்வு உதவியற்ற நிலைக்குத் தள்ளும் துரக்குறைவையும் அடைந்துள்ளது. இந்நிலை ஜனநாயகத்துக்குத் தேவையான நீதியையும், சமத்துவத்தையும், சமூக அமைதியையும் கொண்டு வரும் நிறுவனங்களையும் அமைப்புக்களையும் பெரிதாகத் தாக்கியுள்ளது. தொடரும் போரும் அதன் விளைவுகளும் பொருளாதாரத் தாக்கத்தையும், மனித உரிமை மீறல்களையும், சுரண்டல்களையும் அதிகரித்து ஜனநாயகத்தை பொதுவில் நலிவடையச் செய்துள்ளது.

பொது அபிப்பிராயங்கள் தவறான வழிகளில் திசை திருப்பப்படுவதனால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன என்று சுட்டிக்காட்டி, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சமய, பாரம்பரியங்களிலிருந்தும், வளங்களிலிருந்தும் மிகக் குறைந்தளவு ஊக்கமும் உறுதியுமே பெறப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்ணோட்டத்திலும் நடைபெறும் விவாதங்களின் ஒளியிலும் எதிர்வருகின்ற பொதுத்தேர்தல்கள் இலங்கை மண்ணுக்கு மிகவும் முக்கியமானவையாகும். இது சமாதான நிலைப்பாட்டினைத் தீர்மானிக்கவும், வாதிடவும் எமக்குக் கொடுக்கப்பட்ட ஓர் அருமையான சந்தர்ப்பமாகும்.

மற்றெல்லாக் காலங்களையும் விட இந்நேரத்தில் சமாதானத்தையும், செழிப்பையும் அடைய, எமது அரசியல் தலைவர்கள் எப்படி நம்பியிருக்கிறார்கள் என்று தெரிவிக்க அவர்களுக்கு ஒரு கடமையுண்டு.

### அறிக்கையின் இரண்டாம் பகுதி

ஆகவே பின்வருவனவற்றை உறுதிப்படுத்த விரும்புகிறோம் என்று அறிக்கையின் இரண்டாம் பகுதி தொடர்கிறது.

1. போரினாலும், வன்முறையாலும் நிலையான தீர்வினை அடைய முடியாது. போரிடும் தரப்பினருக்கிடையில் உடனடி யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வினை அடிப்படையாகக் கொண்ட பயனளிக்கும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

2. இலங்கையின் அடிப்படை இறைமையையும், ஒருமைப்பாட்டையும் மதிக்கின்ற வேளையில் இலங்கை உண்மையிலேயே ஒரு பல்லின - மொழி, மத நாடு என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3. இலங்கையின் சரித்திரத்தோடும், கலாச்சாரத்தோடும் ஆழ்ந்த தொடர்புடைய வகையில் பௌத்த மதத்திற்கு முக்கிய இடம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்கின்ற வேளையில், மற்றைய சமயக்குழுக்களின் உரிமைகளும், சலுகைகளும் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

4. இனத்தையோ, மொழியையோ, சமய நம்பிக்கையையோ பொருட்படுத்தாது எல்லா குடிமக்களினதும் சமத்துவமும், அடிப்படை உரிமையையும் பாதுகாக்கப்படவும் உறுதி செய்யப்படவும் வேண்டும்.

5. இலங்கையின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பராமரிக்கின்ற வகையில் போதியளவு அரசியல் அதிகாரங்கள் எல்லாப் பிரதேசங்களுக்கும் பகிரப்பட வேண்டும். இது பல்வேறு பிரதேசங்களில் வசிக்கின்றவர்கள், தமது நீதியான அபிலாசைகளை நிறைவுசெய்யவும், இலங்கை ஒரு நாடு என்கின்ற வகையில், தம்மை ஆளவும் முன்னேறவும் உதவும்.

6. எதிர்வருகின்ற பொதுத்தேர்தல் களத்தில் எல்லாக் குடிமக்களதும் அடிப்படைச்சமத்துவத்தை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். இது எல்லா நிலைகளுக்கும் குறிப்பாக பொதுப்பணிக்கு ஆள்களைச் சேர்த்தல், நிர்வாகப்பணி, கல்வி, சுகாதாரம், போன்றவற்றிற்கும் உண்மையானதாகவே பொருத்தமானதாகும்.

7. சுதந்திர பொது சேவைகள் ஆணைக்குழு, பொலீஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு ஆகிய அமைப்புக்கள் நீதியையும், ஒழுங்கினையும் நிலைநாட்ட மிகவும் முக்கியமானவை.

8. பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற சகல கட்சிகளும் பொதுத் தேர்தலில் வன்முறை, ஆள்மாறாட்டம், குற்றச்செயல் என்பன இல்லாத ஒரு நீதியான தேர்தலுக்கு தம்மை அர்ப்பணிக்கவேண்டும். அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கப்படும்.

9. தேர்தல் செயற்பாடுகளில் எந்தக் குளறுபடியும் ஏற்படாமல் இருக்க அரசு விசேடமாக உறுதிசெய்து மக்கள் தமது கருத்துக்களை வாக்கின் மூலமாக - சுதந்திரமாக வெளிப்படுத்த சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும்.

10. எந்த வன்முறையும், ஆள்மாறாட்டமும், சட்டமில்லா நிலையும், தேர்தல் சுத்துமாத்துக்களும் இந்த நாட்டின் மக்களுக்கும் அவர்களது தேர்தல் செயற்பாட்டுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரான குற்றமாகும்.

11. ஊடகம், குறிப்பாக அரச ஊடகம் - எல்லா அரசியல் கட்சிகளும், கருத்துத் தெரிவிப்பவர்களும் இலகுவாக அணுகக்கூடியதாக இருக்கவேண்டும். அப்போதுதான் மக்களுக்கு, எல்லாவிதமான கருத்துக்களையும் அறிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும்.

12. எல்லாத் தேர்தல் சட்டங்களும், எல்லாக் கட்சிகளாலும் நுணுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுவதன் வழியாக தேவையற்ற மோதல்களும், வன்முறைகளும் தவிர்க்கப்பட வேண்டும். எல்லா ஊடகத்தினரும் பகைமையையும், இன வாதத்தையும் தூண்டாமல், பொறுப்புணர்வோடு செயற்படுவது அவசியமாகும்.

### அறிக்கையின் முடிவுரை

மேற்படி 12 கருத்துக்களையும் தெரிவித்த பின்னர், ஜனநாயகமும், மனித உரிமைகளும் பேணப்பட வேண்டும், அனைவரும் சமமாக வாழவேண்டும், இலங்கையின் ஒருமையும், இறைமையும் பேணப்பட வேண்டும் என்ற கருத்துக்களை முன்வைத்து பின்வரும் முடிவுரை அமைக்கப்பட்டுள்ளது.

ஆகையால், சகல தரப்பு அரசியல் கட்சிகளுக்கும் நன்மனது படைத்த சகல குடிமக்களுக்கும் ஜனநாயகத்தின் தன்மைகளை உறுதிப்படுத்த வேண்டுகிறோம். இந்த அரசியல் செயற்பாட்டின் வழியாக சகல இனத்தவரினதும், சமயத்தவரினதும்,மொழி பேசுபவரினதும் வளர்ச்சியையும் அடையாளத்தையும் உறுதிப்படுத்தி, எம் தாய் நாடாம் இலங்கையின் ஒருமையையும், இறைமையையும் பேண வழிசெய்யுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

நமது ஆண்டவர் அறிவித்தது போல் சகல மக்களையும் எப்போதும் சமாதானத்துக்கும், சமரசத்துக்கும் நாம் அழைக்கிறோம். "சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இறைவனின் மக்கள் எனப்படுவர்." என அறிக்கை முடிவடைகிறது.

மேற்படி அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் ஆயர் பேரவையினரோடு தொடர்புகொண்டு அறிக்கை பற்றிக் கேட்டபோது "நாடு எதிர்நோக்கியுள்ள தேர்தல்கள் எமக்கு முக்கியமானவையாக உள்ளன. ஆனால், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் தேர்தலைக் காட்டிலும் மக்கள் போரைப் பற்றியே பெரிதும் கவலைப்படுவார்கள் என நினைக்கிறோம். அந்த நினைப்பிலே தான் எமது கருத்துக்களில் முதலாவதாக போரைப்பற்றி பேசியுள்ளோம். கடந்தகாலப் போர் வன்செயல்களையும், அழிவுகளையும், உயிரிழப்புக்களையும் தவிர வேறு எந்த முடிவினையும் கொண்டுவரவில்லை. எனவே உடனடி யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தினோம். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு போர் ஒரு வழியல்ல, எனவேதான், அரசியல் தீர்வினை அடிப்படையாகக் கொண்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வேண்டினோம்.

"அடுத்ததாக நாம் அறிக்கைக்குத் தலைப்பிட்டபடி சமாதானத்தை தேர்ந்தெடுக்கும்படி அனைவருக்கும் அழைப்பு விடுத்தோம். தேர்தல் நடைமுறைகள் ஜனநாயக முறையில் வன்முறை, ஆள்மாறாட்டம், தேர்தல் சுத்துமாத்துக்கள் இல்லாத நிலையில் நடைபெறும்போதுதான் சமாதானம் பிறக்கும். எமது அறிக்கையின் இரண்டாவது பகுதி ஜனநாயக முறையிலான தேர்தலையே வலியுறுத்தி நிற்கின்றது" என அவர் தெரிவித்தார்.

போர்க்களமும் தேர்தல் களமும் ஒன்றோடொன்று போட்டிப் போட்டுக் கொண்டு எம்மை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. தேர்தல் களத்தில் ஜனநாயகத்தை மதிப்பதும், மக்களின் ஜனநாயக உரிமைகளை பேணுவதும் முக்கியமானதாகும். பத்துத் தேர்தல் களங்களைச் சந்தித்த அனுபவங்களுடன், யார் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு உழைக்கப் போகிறார்கள் என்பதை இனம் கண்டு, அவர்களை அனைவரும் ஒட்டுமொத்தமாக ஆதரிப்பது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். ★

# வாசகர் திருமுகம்

## 'ராகிங்' நோய்க்குச் சிகிச்சையளித்துவிட்ட மருத்துவபீட மாணவருக்குப் பாராட்டு

தொடரும் போரின்விளைவாக இடம்பெயர்வுகள், அகால மரணங்கள், அங்க இழப்புகள், சொத்து இழப்புகள் எனப் பல்வேறு இன்னல்களாலும் மக்கள் அவதிப்படும் வேளையிலும் யாழ். பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து இடம்பெற்று வந்ததும், பலராலும் கண்டிக்கப்பட்டதுமான பகிடிவதையை 2000 ஆண்டுமுதல், யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் இடம்பெறாது தடுப்பதற்கு, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் மன்றம் உறுதியான நடவடிக்கை எடுத்து மக்கள் மனத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது.

வீட்டுச் சூழலிலிருந்து விடுபட்டுத் திருப்தியான இருப்பிட வசதியின்றி - தரமான உணவின்றி - பொருளாதாரப் பிரச்சினைகளின் மத்தியில் - பரந்துபட்ட பரப்பைக் கொண்ட மருத்துவ பாடங்களின் சுமையைச் சுமந்து - மனம் நொந்து அவதியுறும் புதிய மாணவர்களைப் பகிடிவதை செய்து துன்புறுத்துவது வெந்துறு புண்ணில் வேல் நுழைந்தாங்கு வேதனை தரும் நிகழ்வு எனவும் பிறர் துன்பத்தில் இன்பம் காண்பது மனிதத்துவமன்று எனவும் இதனைத் தவிர்க்க வேண்டுமெனவும் பல்கலைக்கழக மருத்துவபீடப் பெற்றோர், நலன் விரும்பிகள் மன்றம் மருத்துவபீட மாணவர் மன்றத்திற்கு அன்பான வேண்டுகோளை விடுத்தது. இளைஞர்கள் மூத்தோரை மதிக்கும் பண்பு குறைந்துவரும் இக் காலத்திலும் மூத்தோர் வார்த்தை அமிர்தம் என்றுணர்ந்து எமது வேண்டுகோளை ஏற்று இந்த ஆண்டுமுதல் பகிடிவதையை நிறுத்துவதோடு நின்றுவிடாது, தாமாக உணர்ந்து, புதிய மாணவர் பயன்பெறத்தக்க பல நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்துள்ளது. புதிய மாணவர்களைத் தமது பிள்ளைகளாகக் கருதி அவர்களது துன்பத்தைத் தமது துன்பமாகக் கருதித் துயருறும் பண்பு எமது மக்களிடையே வளர்ந்து வருவதால், இவ்வருடம் புதிய மாணவர்களை மகிழ்விக்க, வரவேற்க, பயன்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளை மக்கள் அனைவரும் அறிந்து அவர்களும் மகிழ வேண்டும். இதற்கு ஏற்பாடு செய்த யாழ். பல்கலைக்கழகத்தின் மருந்துவ பீட மாணவர் மன்றத்தை விதந்து பாராட்டுகிறேன்.

*ச.ஆ.கோபாலமூர்த்தி,*
*நடவடிக்கைக்குழு உறுப்பினர்,*
*யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட*
*பெற்றோர் நலன்விரும்பிகள் மன்றம்.*

## பஸ் சேவையில் அடிக்கடி தடங்கல் ஏற்படுவது ஏன்?

பருத்தித்துறையில் இருந்து 766ஆம் இலக்க - மானிப்பாய்- நவாலி - வட்டுக்கோட்டை வழியாகப் போக்குவரத்துச் செய்யும் பஸ் 2000.08.28ஆம் திகதி தனது சேவையை பருத்தித்துறையிலிருந்து மேற்கொள்ளவில்லை. அன்றைய தினம் மட்டுமல்ல கூடுதலாக அடிக்கடி பழுதடைந்து தனது சேவையைச் செய்ய முடியாத நிலையிலுள்ளது. இதனால் இன்றைய காலச்சூழ்நிலையில் பஸ் இல்லாமல் இடைவழியில் அடிக்கடி கஷ்டத்திற்கு உள்ளாகும் நிலை நிலவுகிறது. குறிப்பாக 766ஆம் இலக்க பஸ் இடைத்தூரத்தில் பழுதடைந்தால் அந்தவழியால் வரும் 767ஆம் இலக்க பஸ் 766ஆம் இலக்க பஸ் நேரத்தினைக் கவனித்து தனது சேவையை மேற்கொள்வது நீண்டதூரம் செல்லும் பயணிகள், அலுவலர்கள், மாணவர்கள் போன்றவர்களின் பயணப் பிரச்சினையைத் தீர்க்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு பயணிகள், மாணவர்கள், அலுவலர்களின் தேவையைக் கருத்திற்கொண்டு 766ஆம் இலக்க மானிப்பாய்-நவாலி-வட்டுக்கோட்டை பஸ்சேவையை சீரான சேவையாற்ற முயற்சிக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

"20.08.2000ஆம் திகதி 766ஆம் இலக்க பஸ்ஸிற்காகக் காத்திருந்து பஸ் இல்லாமல் யாழ்ப்பாணம் சென்று பின்னர் 751ஆம் இலக்க பஸ்ஸில் வீடு திரும்பும் வேளையில் நீண்டதூரம் பயணம் செய்யும் ஏக்கம் ஒருபுறம், பஸ் இடைவழியில் பழுதடைந்திருந்திருந்த நேரம் இரவு 7.00 மணி. தற்போதைய சூழ்நிலையில் இரவு 7.00 மணிக்கு வீடுதிரும்பும் நிலைமை நாட்டில் இல்லை என்பது யாவரும் அறிந்ததே." இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். அதுவும் பெண்களின் நிலைமை இச்சந்தர்ப்பத்தில் பெரிதும் பரிதாபகரமானது என்பது அதிகாரிகளுக்குச் சமர்ப்பணமாகின்றது.

எனவே நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கவனத்திற்கொண்டு 766, 751ஆம் இலக்க பஸ்சேவையை சீரானமுறையில் நடத்துவதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*பாதிக்கப்பட்ட பயணிகள்.*

## அலைச்சல்கள் குறையாதா?

இடம்பெயர்ந்தோரில் இரக்கப்பட்டோ என்னவோ, அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் இரண்டாயிரம் ரூபா உதவிப்பணத்தைப் பெறுவதில் ஏற்படும் அலைச்சல்கள், வீண்செலவுகள் இடம்பெயர்வின்போது ஏற்பட்ட கஷ்டத்தைவிடக் கஷ்டமாக இருக்கின்றது. சில[illegible] பிரிவுகளில் இதற்கான பதிவுகள் கிராம அலுவலர்கள் மூலமும், சில இடங்களில் பிரதேச செயலகங்கள் மூலமும் பதியப்பெறுகின்றன. இதனால் எங்கெங்கோ இருந்து பலமைல் தூரம் சென்று பிரதேச செயலகங்களில் கியூவில் நின்று பதியவேண்டியுள்ளது. அதுவும் பலருக்கு ஒருநாளில் நிறைவேறுவதில்லை. பலநாள்கள் அலையவேண்டியும் உள்ளது. அங்கு சென்றபின்தான் கிராமசேவகரின் உறுதிப்படுதல் வேண்டும் என்பார்கள். அதற்காகக் கிராமசேவகரின் வதிவிடங்கள் தேடி அலைந்து உறுதிப்படுத்தவேண்டியுள்ளது.

இவற்றைவிடச் சில பிரிவுகளில் பதிவின்போது வங்கிக் கணக்கு இலக்கம் கேட்கிறார்கள். வேறு சில இடங்களில் அவை தேவையில்லை காசாக வழங்கப்படும் என்கிறார்கள். இன்னும் சில இடங்களில் வங்கிக் கணக்கு இல்லாவிட்டால் பதிய முடியாது, புதிதாகக் கணக்கு திறந்து இலக்கம் கொண்டுவரும்படி கூறுகிறார்கள். இதனால் பலர் அலைந்து திரும்புகிறார்கள். எனினும் கணக்கு ஆரம்பிப்பதற்காக வங்கிக்கு ஓடுகிறார்கள். அங்கும் கணக்குத் திறப்பதற்கு ஒருவரின் உறுதிப்படுத்தல் தேவை என்கிறார்கள். ஏதோ ஒரு விதமாக அதையும் பெற்றுப் புதிய கணக்கை ஆரம்பித்துள்ளார்கள். இப்போது என்னவெனில் இரண்டாயிரம் ரூபாவை வங்கிமூலம் கொடுக்காது பிரதேச செயலகங்களில் வைத்து காசாகக் கொடுக்கப்போவதாகவும் ஒரு கதை. இந்நிலையில்-கஷ்டப்பட்ட நிலையில்-நூறு ரூபா செலவழித்து திறந்த வங்கிக் கணக்கு வீணாகின்றது. எல்லோராலும் அக்கணக்கை தொடரமுடியுமா? திருப்பிப் பெறுவதானாலும் பத்துரூபா இழக்க வேண்டிவரும். ஏன் இந்த வீண் இழப்பு, வீண் அலைச்சல்? பிரதேச செயலகங்களில் காசு பெறுவதற்கு இன்னும் எத்தனை காலைவேளை எழுந்து கியூவுக்கு ஓடவேண்டி வருமோ? ஒரே திட்டமாக அத்தொகையை வங்கியில் சேர்த்தால் தேவையானோர் தேவைப்பட்ட நேரத்தில், தேவைப்பட்ட தொகையை அதில் இருந்து எடுத்துக் கொள்ளலாமே? ஒவ்வொருவரும் பல்வேறு வங்கிகளில் கணக்கு வைத்திருப்பதால் பிரதேச செயலகங்களில் மக்கள் நெரிசல்களைக் குறைத்துக் கொள்ளலாமே? இதைவிடுத்து ஏன் இப்படி அடிக்கடி புதியமாற்றங்களை ஏற்படுத்தி மக்களை அலைய வைக்கிறார்கள்? சம்பந்தப்பட்டவர்கள் இதனை ஒரு சீருக்குக் கொண்டு வரமாட்டார்களா?

*-எழில்-*
*கோப்பாய்.*

## கோட்ட மட்ட உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,செப்.5

வலிகாமம் கல்வி வலய உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

16 வயதுப் பிரிவின்கீழ் 'அ' பிரிவில் நான்கு பாடசாலைகள், 'ஆ' பிரிவில் மூன்று பாடசாலைகள் என மொத்தம் ஏழு பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

18 வயதுப் பிரிவின்கீழ் 'அ' பிரிவில் மூன்று பாடசாலைகளும் 'ஆ' பிரிவில் நான்கு பாடசாலைகளுமென மொத்தம் ஏழு பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

இப் போட்டிகளுக்கு இணைப்பாளர்களாக வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.மகாலிங்கம் மற்றும் ஆசிரியர்களான ஜெ.ஜெயமோகன், க.கனகசபாபதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(ஐ-86)

## எழுச்சிப் பேரணி

வவுனியா,செப்.5

'ஓயாத அலைகள் - 3' எழுச்சிக் கலை நிகழ்வுகளின் ஓர் அங்கமாக வன்னியில் ஜெயபுரம் பகுதியில் கடந்த சனியன்று மாலை போர் எழுச்சிப் பேரணி இடம்பெற்றது.

ஆனந்தபுரத்தில் புதுக்குடியிருப்பு போர் எழுச்சிக் குழுவின் ஏற்பாட்டில் தீப்பந்த ஊர்வலமும் இடம்பெற்றது. (உ-8)

## உடற்தகைமைப் பரீட்சை

வலி.வடக்கு,செப்.5

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்விப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்துத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான உடற்தகைமைப் பரீட்சை இன்றும் நாளையும் காலை 9.00 மணிமுதல் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-86-ரி)

## பட்டியலில் தமிழர் எவரும் இல்லை

கொழும்பு,செப்.5

பொ.ம.ஐ.முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் தமிழர் எவரும் சேர்க்கப்படவில்லை. ஆனால் கடும் போக்காளர்களான தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, சுசில் முனசிங்க ஆகிய சிங்கள வேட்பாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஐ.தே.கவில் இரு தமிழர்களும் இரு முஸ்லீம்களும் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

(ஐ-6-20-186)

## புத்தர் சிலைகள் மீட்பு

கொழும்பு,செப்.5

கட்டுகஸ்தோட்டையிலுள்ள நகைக்கடை உரிமையாளர் ஒருவரின் வீட்டில் இருந்து மிகப் பழைமை வாய்ந்த புத்தர் சிலைகள் சிலவற்றைப் பொலீஸார் கைப்பற்றி உள்ளனர்.

மத்திய மாகாண விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்தே இந்த நகைக் கடை உரிமையாளரின் வீட்டில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன.

இச் சோதனையின் போது மிகப் பழைமை வாய்ந்ததும் மிகப் பெறுமதிமிக்கதுமான 24 புத்தர் சிலைகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை கண்டு அவற்றைக் கைப்பற்றியுள்ளனர்

தற்போது அச்சிலைகள் புதைபொருள் ஆராய்ச்சி திணைக்கள அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டு அவற்றின் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-6)

## அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி,செப்.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடியில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை தொகைமதிப்புப் படிவங்கள் தொடர்பான விடயங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கவுள்ளதால் அனைத்து அதிபர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (க-117)

## தெய்வீக இசை வழங்குவதில் நாதஸ்வரம் முதன்மையானது

இந்துக்கோயில் சமய வழிபாட்டு நிறுவனமாக மட்டுமன்றிப் பண்பாட்டு நிலைக்களமாகவும் விளங்கி வந்துள்ளது. இறைவனே 'கலையாகிக் கலைஞானம் தானேயாகி' கலை வடிவானாகவும், கலையின் மிகச் சிறந்த ஆசானாகவும், கலையின் முடிவான இலக்காகவும் விளங்குகின்றான் என இந்து சமயம் - குறிப்பாக சைவம் கூறுகின்றது. எனவே இறைவழிபாட்டுக்குரிய சாதனங்களாக இசையும், நடனமும் விளங்குகின்றன. இன்று நடனம் கோயில் கிரியைகளிலே குருமார்களின் பாவனைகளில் மட்டுமே பெரிதும் இடம்பெறுகிறது. ஆனால் இசையோ தொடர்ந்து கோயிலின் நித்திய, நைமித்தியக் கிரியைகளிலும் வழிபாடுகளிலும் இடம்பெற்று வருகிறது. இசை வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை என இரு வகையாக உள்ளது. கலைஞர் தத்தம் இசைஞானம், கற்பனைத்திறன், மதிநுட்பம், குரல்வளம் முதலியவற்றைத் தக்கவாறு பயன்படுத்தி வாய்ப்பாட்டிசையினை இசைத்து இறைவழிபாடு செய்வர். மற்றவர்களையும் இறைவனிலும் இசையிலும் ஈடுபடச் செய்வர். இவர்களைப் போலவே வாத்திய இசைக்கலைஞரும் இதே இசையினைக் குறிப்பிட்ட வாத்தியத்தின் மூலம் இசைத்து இறைவழிபாடு செய்து மற்றவர்களையும் இறைவனிலும், இசையிலும் ஈடுபடச் செய்வர்.

இத்தகைய இசைக் கருவிகளில் குறிப்பாக தெய்வீக இசையினை வழங்குவதில் நாதஸ்வரம் முதன்மையானது. இது நாகஸ்வரம் எனவும் அழைக்கப்படும். இது மங்கள வாத்தியமாகக் கோயில்களிலும், திருமணம், விழாக்கள் போன்ற மங்களகரமான வைபவங்களிலே நன்கு பயன்படுத்தப்படுகின்றது. இவற்றில் இது இன்றியமையாததுமாகும்.

இந்துக் கோயில்களில் இடம்பெறும் கிரியைகள், விழாக்கள் முதலியனவற்றிலே வாய்ப்பாட்டு (திருமுறை போன்றவை) மட்டுமன்றி நாதஸ்வரமும் அதனோடு இணைந்து தவில், ஒத்தூது, சல்லரி ஆகியனவும் முறைப்படி இசைக்கப்படும். இவை குறிப்பிட்ட தெய்வம், காலம் நேரத்திற்கேற்ப குறிப்பிட்ட இராகம், தாளத்தில் இடம்பெறும். எனவே கோயில்களிலே இசைச்சேவையினைச் செய்வதற்கு ஆஸ்தான கலைஞராக நாதஸ்வரக் கலைஞர்களும் ஏனையோரும் நியமிக்கப்படுவர். இசை, நடனம் மூலம் இறைவனை வழிபடும் முறை 'நாதோபாசனை', 'நாதாஞ்சலி' எனப்படும். இறைவனே நாதவடிவமாக விளங்குகின்றான். அவனை வழிபடுவதற்கான சிறந்த முறை இதுவேயாம் எனத் தியாகராஜ சுவாமிகள் கூறியுள்ளார்.

இந்துக் கோயில்களின் அமைப்பு மட்டுமன்றி, வழிபாட்டுக்குரிய காலக்கிரமம், பூசைக்கிரமம், இவற்றில் இடம்பெறவேண்டிய கலைக்கிரமம் முதலியன அவசியமாகும். குறிப்பிட்ட காலம், நேரப்படி பூசைகள், கிரியைகள், இசை முதலியன முறைப்படி இடம்பெறவேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று நம் நாட்டிலே குறிப்பாக காலம், நேரம் பல இடங்களிலே பின்பற்றப்படாமை மிகவும் வேதனைக்குரியதாகும். ஆனால் நல்லூர் கந்தசாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம், அராலி கஃரப்பிட்டி கணபதீஸ்வரன் திருக்கோயில் போன்றவற்றிலே நிர்வாகம் நன்கு நடைபெறுவது மட்டுமன்றி வழிபாட்டு ஒழுங்கு முறைகளும் குறிப்பிட்ட நேரத்துக்கு நடைபெறுவது பாராட்டற்குரியது.

மேற்குறிப்பிட்ட கணபதீஸ்வரன் ஆலயத்திலே நித்திய, நைமித்தியக் கிரியைகள், விழாக்கள் முதலியன கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக ஒழுங்காக நடைபெறுகின்றன. அர்ச்சகர்கள், கலைஞர் முதலியோர் நன்கு கவனிக்கப்படுகின்றனர். இதனை நிர்வகித்துவரும் அறங்காவலரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியருமான கலாநிதி சி.க.சிற்றம்பலம் நன்கு பாராட்டற்குரியர். தாம் நிர்வகித்து வரும் ஆலயத்தின் ஆஸ்தான நாதஸ்வர வித்துவானாகக் கடந்த பல ஆண்டுகளாகத் தெய்வீக நாதாஞ்சலி செய்துவரும் திரு. இ. சிவகுமாரின் கலைச்சேவையினைப் பாராட்டி 'நாதகலாமணி' எனும் சிறப்புப் பட்டத்தினை அவருக்கு வழங்கிக் கௌரவிக்க முன் வந்துள்ளது பாராட்டற்குரியதாகும். ஒருவரை அவர் வாழும்போதே கௌரவிப்பது தான் சாலச்சிறந்ததாகும். நாதஸ்வரம் ஒரு சிறந்த இன்னிசை வாத்தியமாகும். பலவகையான ராகங்களிலமைந்த இசை உருப்படிகளை இதன்மூலம் இசைக்கலாம். இதன் இன்னிசை வேறுபாடின்றி அனைவரையும் கவரும் பாங்கில் அமைந்திருக்கும். யாழ்ப்பாணம் தொன்று தொட்டு நாதஸ்வரம், தவில் கலைகளுக்குப் புகழ்பெற்ற பிரதேசமாகும். ஏனைய பலகலைகளிலும் பார்க்க இது மேம்பட்டிருப்பதற்கு மக்களும், குறிப்பாகக் கோயில்களும் அளித்து வரும் பேராதரவு மிக முக்கியமானதாகும். எனவே இக்கலை மேலும் சிறப்படையக் கோயில்களும் மக்களும் இதற்கு ஆதரவு நல்குவதோடு கலைஞர்களையும் தக்கவாறு கௌரவிக்க வேண்டும். இந்த வகையில் கரைப்பிட்டி கணபதீஸ்வர ஆலய தர்மகர்த்தா சபையின் செயற்பாடு பாராட்டற்குரியதும் முன்மாதிரியானதுமே.

'வளர்க தெய்வீக இசைக்கலை'
**- பேராசிரியர் வி.சிவசாமி**

## தனிநாயகம் அடிகளுக்கு நெடுந்தீவில் உருவச் சிலை

யாழ்ப்பாணம்,செப்.5

தமிழாராச்சி மாநாட்டின் முன்னோடிகளில் ஒருவரான தவத்திரு. தனிநாயகம் அடிகளுக்கு நெடுந்தீவில் அமைக்கப்படவிருக்கும் உருவச் சிலைக்கான அத்திவாரக்கல் அண்மையில் நாட்டப்பட்டது.

நெடுந்தீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்ட வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி அத்திவாரக் கல்லை நாட்டி வைத்தார்.

ஈ.பி.டி.பியின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் மோகன் மற்றும் நெடுந்தீவுப் பிரதேசசபை, கலாசாரசபை ஆகியவற்றின் உறுப்பினர்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள், நெடுந்தீவுக்கான கலாசார உத்தியோகத்தர் ஆகியோரும் இந்த அத்திவாரக் கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நெடுந்தீவு கலாசார சபையினால் மேற்படி சிலை அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை மேற்படி உருவச் சிலையை அமைப்பதற்காக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ரூபா 10 ஆயிரத்தை வழங்கியுள்ளார்.

(உ-7)

## வாகனக் கொள்வனவுச் சலுகையை 178 எம்.பிக்கள் பெற்றுக்கொண்டனர்

கொழும்பு,செப்.5

சலுகை அடிப்படையிலான புதிய வாகனக் கொள்வனவுக்கான அனுமதிப்பத்திரங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரில் 178 பேர் பெற்றுள்ளதாக அரச திறைசேரிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்க, அனுரா பண்டாரநாயக்க, ரவி கருணாநாயக்க, அமைச்சர்கள் மங்கள சமரவீர, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எம்.எச்.எம். அஷ்ரப் உட்பட 47 பேர் இந்த அனுமதிப்பத்திரங்களைப் பெறவில்லை.

ஏனைய முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ, புளொட், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சலுகை அடிப்படையிலான வாகன அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுள்ளனர்.

இந்த வாகனச் சலுகை தேர்தல் செலவுகளை மையமாக வைத்து அரசினால் வழங்கப்பட்ட உத்தேசிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

SONY T.V. கலர் 21 இஞ்சி, சிங்கர் தையல் மெசின் விற்பனைக் குண்டு. தொடர்பு :C. S. அந்தோனிப் பிள்ளை, 65 குருசோவீதி, சுண்டுக் குளி, யாழ்ப்பாணம். (77994)

13 H.V லிஸ்டர் எஞ்சின் விற்ப னைக்குண்டு. 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (78003)

நல்ல இன ஆடுகள் விற்ப னைக்கு உண்டு. ஆறுமாதக்குட்டி யும், தாயும விற்பனைக்குண்டு. 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (78004)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த 1968ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றம நிறைந்த கிரகபாவம் 35 கொண்ட சுவிஸ் நாட்டில் நிரந்தரவதிவுரிமை பெற்ற, படித்த, அழகிய, உயர் குணம் மிக்க மணமகனுக்குத் தகுதி வாய்ந்த மணமகள் தேவை. திரு மண வைபவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று உடன் அழைத்துச் செல்லப்படுவார். சகல விவரங்களும் உள்ளடங்கலாய உடனடித தொடர்புக்கு:விள. இல. 1091,மே/பா உதயன்,யாழ்ப்பாணம்.(77915)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமை யக் கட்டிக்கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பா ணம். தொலைபேசி:3081 (c/12787)

## உடன் விற்பனைக்கு

6 ஸ்ரீ 5656 இலக்கம் கொண்ட ஓடக்கூடிய நிலையில் உள்ள MORRIS OXFORD காரும், ரியூட்டறித தளபாடங்களும், வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சம்பியன் லேன், கொக்கு வில். (K.K.S வீதிப்பக்கத்தில் இருந்து 3ஆம் வீடு) (78015)

## தவறிவிட்டது

கோண்டாவில கிழக்கைச சேர்ந்த இராசதுரை பரமேஸ்வரி என்பவரது தேசிய அ.அட்டை, விசேட அ. அட்டை, பயணச்சீட்டு என்பன கைப் பையுடன தெல்லிப்பழை சோதனைச் சாவடி அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரிய விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (78016)

மாணிக்கவாசகர் இந்திராணி என்பவருடைய தே.அ.அ.(இல. 586 912615v), வி.அ.அ.(இல. 0907021 636) என்பன மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருப்பதி தொலைத்தொடர்பு நிலையம், மருதடி, மானிப்பாய் அல்லது சங்குவேலி தபாற்கந் தோரில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (78013)

கண்ணையா கமலராஜா என்ப வருடைய விசேட அ.அ.(இல. 0912 05616) இணுவிலுக்கும் கச்சேரி நல் லூருக்கும் இடையில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து லிங்கம் தொலைத்தொடர்பு சேவை, தாவடி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78009)

முத்துலிங்கம் ஸ்ரீசுபானு என்பவ ருடைய விசேட அ.அ.(இல. 090303 5383), தேசிய அ.அ.(இல. 7569217 70v) என்பன 02.09.2000 அன்று அச்சுவேலி சிறிதேவி தொலைத் தொடர்பு நிலையத்திற்கும் அச்சு வேலி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெ டுத்தவர்கள் சிறிதேவி தொலைத் தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம் அல்லது அச்சுவேலி என்னும் முக வரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (78011)

## இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த. மாணவர்கள் தமிழ் மொழியும் இலக்கியமும கற்க உத வக்கூடிய சிறுகதை, நாவல், நாட கம், இலக்கிய விமர்சனம் பெற்ற நான்கு பிரிவுகளில அமைந்த 38 கட்டுரைகள். அராலியூர் ந. சுந் தரம்பிள்ளை எழுதியவை. (78020)

---

உ

சிறுப்பிட்டி வடக்கு ஞானவைரவர் ஆலய

# அலங்கார உற்சவம்

மேற்படி ஆலயத்தில் கடந்த 27.08.2000 தொடக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அலங்கார உற்சவத்தில் நாதஸ்வர, தவில் நித்திய கச்சேரி வழங்கிய கெருடாவில் தொண்டமனாறைச் சேர்ந்த நாதஸ்வர வித்துவான்

கலாநிதி A.M. கோவிந்தராஜன்

குழுவைச் சேர்ந்த தவில் கலைஞர் இளவரசன்

M.S. தெட்சணாமூர்த்தி,

நாதஸ்வரக் கலைஞர்

V.P. மயூரன்

ஆகிய இருவருக்கும் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தலும், மேற்படி உற்சவ தினங்களில் தொடர் சொற்பொழிவாற்றிய இளம் சைவப் புலவர்

திரு. S. செல்வமனோகரன்

அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல் ஆகிய இரு வைபவங்களும் உற்சவ இறுதி நாளாகிய இன்று (05.09.2000) செவ்வாய் மாலை 7 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விளம்பர அன்பளிப்பு:

**※ தினேஷ் ரோஜா சோலை ※**

*சிறுப்பிட்டி வடக்கு.*

எம்மிடம் சகல இன ரோஜாக் கன்றுகளும் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்:
சி. ஞானகுமாரன் (ஆசிரியர்)

(78010)

---

சாவகச்சேரியில் இயங்கிவந்த

# அம்பிகா டிஸ்பென்சரி

தற்போது

K.K.S. வீதி, இணுவிலில் *(ஆஸ்பத்திரிக்கு அருகில்)* இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(78012)

---

# அவசரப் பொதுக்கூட்டம்

10.09.2000 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு (புதியநேரம்) மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கும் சித்த போதனா வைத்தியசாலையில் சகல BSMS பட்டதாரிகளுக்குமான பொதுக்கூட்டம் இடம்பெறும். எல்லோருடைய பிரசன்னத் தையும் எதிர்பார்க்கின்றோம்.

செயலாளர்,
BSMS பட்டதாரிகள் சங்கம்.

(78014)

---

# போட்டியில் இருந்து வாபஸ்

## தம்பு லோகநாதபிள்ளை

ஆகிய நான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து வாபஸ் பெற்றுக் கொள்கின்றேன் என்பதை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**த. லோகநாதபிள்ளை**

(c/12806)

---

# மரண அறிவித்தல்

## டேவிட் ஆரோக்கியநாதன்

நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட டேவிட் ஆரோக்கியநாதன் 02.09.2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டேவிட்-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், திரு.திருமதி அந்தோனிப்பிள்ளையின் அன்பு மருமகனும், திரேசம்மாவின் பாசமிகு கணவரும், சுபதர்சினி(கொழும்பு), சிவதர்சினி (சப்ரகமுவ பல்கலைக்கழகம்), தீபதர்சினி(யாழ். இந்துமகளிர் உயர்தர வகுப்பு மாணவி), நிறோஷினி(மானி. மகளிர் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவி) ஆகியோரின் அன்புத்தந்தையும், டேவிட் முடியப்பு(இளைப் பாறிய ஆசிரியர்-மானி. இந்துக்கல்லூரி), திருமதி லூர்த்தம்மா மரியாம் பிள்ளை, திருமதி கதறீன் கல்யாணஇராமையர்(கொழும்பு மைக்கல் நேசிங்ஹோம்), அருட்செல்வி மேரி தேவநேசம் A.C. (அதிபர்- யாழ். சென். பெனடிக் வித்தியாலயம்) ஆகியோரின் நேசம்மிகு சகோதரனும், மோனிக்கா, மரியாம்பிள்ளை, கல்யாணராமையர் ஆகியோரின் மைத்துனரும், அன்ரன் கிறிஸ்ரி(கனடா), திருமதி வனஜா ஜெயசீலன் (ஆசிரியை, மானி. மகளிர கல்லூரி), திருமதி கிரிஜா தவநாதன், திருமதி றூபா ஜோண்சன்(கொழும்பு), அருட்செல்வி சுதர்சினி A.C. (ஆசிரியை, அடம்பன் ம.வி.), திருமதி ஸ்ரெலா பிரபாகரன்(கனடா), யூடிக்சன்(கனடா), ஜான்சன்(மருத்துவ மாணவன், ரஷ்யா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜோண்சன்(மஸ்கன் கொம்பனி, கொழும்பு), டேவிற்சன் (கனடா), சாம்சன் (கனடா), றொபின்சன்(கனடா), ஆன்றோஸ்(நோர்வே) ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.09.2000) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**சகோதரி M. தேவநேசம்**
(கன்னியாஸ்திரி, கார்மேல் மடம்)

*நவாலி தெற்கு.*
*மானிப்பாய்.*

(78007)

---

# முதலாம் ஆண்டு நினைவு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 - 11 - 1946 | 19 - 08 - 1999 |

அமரர்

## வன்னியசிங்கம் கார்த்திகேசு

திதி : 05.09.2000

அன்பு அப்பாவே!

நீங்கள் வான்விட்டுச் சென்ற நாளை
வாரி அணைக்க வாடுதே எம் நெஞ்சம்
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன? உங்கள்
அன்புக்கு ஈடாகுமோ அப்பா!

விதி வரைந்த பாதையிலே பயணம்
தொடர்ந்ததனால்
கதியிழந்த நிலையில் நாம் கலங்கி நிற்கிறோம்
அப்பா!

தாங்கொணாத துயரத்தில் தவிக்கின்ற
நிலையில் நீங்காத நினைவுடன்
வாழ்வைத் தொடர்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**தாய், மனைவி, பிள்ளைகள்.**

*"கற்பகா பண்ணை",*
*அம்பன்,*
*குடத்தனை.*

(77980)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 12 - 1936 | 07 - 08 - 2000 |

அமரர்

## இரகுநாதன் சிவஞானசுந்தரம்பிள்ளை

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம், மன்னார்)

கடந்த 07.08.2000ஆம் திகதி அன்று இறைபதம் எய்திய எங்கள் குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பத்திரிகை வாயிலாகவும், நேராகத் தரிசனம் தந்தும், அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.09.2000) புதன்கிழமை நடைபெற்று வீட்டுக்கிருத்திய வைபவமும் நினை வஞ்சலி நிகழ்வும் 07.09.2000ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தரு ணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின் றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருளை வேண்டிநிற்கும்

**டாக்டர் திருமதி சாவித்திரிதேவி**
**இ. சிவபாதசேகரம்**
(அதிபர்- யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்)
**இ.தணிகாசலம்**
(சகோதரர்கள்)

*1ஆம் கட்டை ஒழுங்கை,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

(77975)

# ஐ. தே. கவுக்கும் கூட்டணிக்கும் புலிகளுடன் நெருங்கிய தொடர்பா?

## அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு ஆனந்தசங்கரி கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 5

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளன என அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்திருப்பதை கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய கூட்டு வைததிருப்பதாக இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை, சமுர்த்தி அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா செய்தியாளர் மாநாட்டில் கூறியிருப்பது வேடிக்கையானது.

தினமும் செத்துப் பிழைக்கும் ஏழைத் தமிழ்மக்கள் தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து இடம்பெயர்ந்து நல்மனம் படைத்தோரின் வீடுகளிலும் வீட்டுக் கோடிகளிலும், அகதிமுகாம்களிலும் அடிப்படைத்தேவைகள் கூடக் கிடையாது அல்லலுறுகின்றனர். இந்த மக்கள் உடனடியாகப் போர் நிறுத்தப்பட வேண்டுமென்றே குரல் கொடுக்கின்றார்கள்.

பல்லாயிரக்கணக்கான உயிர்கள் களத்திலே பலியிடப்படுகின்றன என்றால் அது யாரின் நன்மைக்காக மக்களின் அபிலாசைகளை உணராது தம்பதவிகளை மட்டும் எப்படியும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற சுயநலப் போக்குடைய எஸ். பி. திஸநாயக்க போன்றோர்களுக்காகவே என்பதே உண்மை.

எஸ். பி. திஸநாயக்க போன்றோர் ஒரு தடவை யாழ்ப்பாணம் விஜயம் செய்தால் மக்கள் படும் துன்ப துயரங்களை உணர முடியும். இங்கு கேட்கும் சத்தங்கள் எல்லாம் குண்டுகள் வெடிக்கும் சத்தங்களே ஆகும். பீதியுடன் வாழும் மக்களுக்கு எஸ். பி. திஸநாயக்கா கொடுப்பது வெறும் சமுர்த்தி நியமனங்களே. தமிழர்கள் வேறு பதவிகள் வகிக்கத் தகுதியற்றவர்கள் என்பதே அவரின் எண்ணம் ஆகும்.

தமிழ் மக்களால் அரசின் தீர்வுத் திட்டம் நிராகரிக்கப்பட்டமைக்கு உரிய காரணம் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு அமைய இந்தத் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்படாமையே ஆகும். இந்தத் திட்டம் நாட்டுப் பிரிவினையை ஏற்படுத்தும் என்ற பொய்க் காரணம் காட்டியே ஐ. தே. கட்சி நிராகரித்தது. உண்மை இவ்வாறிருக்க ஐ. தே. கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய கூட்டு என திஸநாயக்க கூறுவது விஷமத்தனமானது ஆகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு — யுத்தம் நிறுத்தப்படவேண்டும், விடுதலைப் புலிகள் பேச்சுக்கு அழைக்கப்பட வேண்டும். அவர்களும் ஏற்கக்கூடிய தீர்வுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதே. இது உலகறிந்த உண்மை.

நாம் யாருடனும் கூட்டு வைக்கவில்லை மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற வகுப்புவாதக் கட்சியோடு கூட்டுவைததுக் கொண்டு தமிழ் மக்களை ஒரு வர்த்தகப் பொருளாகக் கருதிக் கொண்டு அரசியல் வியாபாரம் நடத்தும் சிலதமிழ்க்குழுக்களை ஊன்றுகோலாக வைத்துக்கொண்டு ஓர் இலட்சியத்துடன் அன்றுதொட்டு இன்று வரை பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் வலையில் சிக்காமல் தனித்து நின்று போராடிவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியை விமர்சிக்கும் தகுதி அமைச்சர் திஸநாயக்காவுக்கு உண்டு என நாம் நினைக்கவில்லை.

நாம் இழந்தவை பல. மாறி மாறி வந்த அரசுகள் நம்மக்களுக்கு இழைத்த கொடுமைகள் துன்பங்கள் சொல்லில் அடங்காதவை.

அமைச்சர் திஸநாயக்க வள்ளல் போல வாரி வழங்கும் சமுர்த்தி நியமனங்கள் நிலைக்குமா என்றும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே தென்னிலங்கையில் வழங்கப்பட்ட இப்பதவிகள் தமிழ் இளைஞர்களுக்கு காலம் தாமதித்து வழங்கப்படுவதன் உட்காரணம் என்ன என்றும் தமிழ் இளைஞர்கள் கேட்கின்றார்கள்.

தரகர்களை வைத்து நியமனங்களை வழங்குவது தேர்தல் காரணமாகத் தான் என்பதை அனைவரும் அறிவார்கள். காலம் தாமதித்து வீசப்படும் எலும்புத் துண்டுகளை பொறுக்கி எடுக்குமளவுக்குத் தமிழ்ச் சமுதாயம் ஏமாளிகளல்லர்.

ஆனால் உரிய நேரத்தில் உரிய பாடத்தை அரசுக்கும் அமைச்சருக்கும் அரசியல் வியாபாரிகளுக்கும் தமிழ்ச்சமுதாயம் போதிக்கும் என்பது உறுதி.

எஸ். பி. திஸநாயக்கா விளையாட்டுத்துறை அமைச்சராக இருக்கலாம். விளையாட்டுப் பிள்ளையாக இருக்கக்கூடாது. எதையும் விளையாட்டுத் தனமாக எடுக்காமல் பேச்சிலும், செயலிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது சிறந்ததாகும். அதர்மம் ஒரு போதும் நிலைப்பதில்லை — என்றுள்ளது. (இ-7)

# கலைநூற்பண்பாடு வளரும் இடமாக விளங்கும் நவாலி

## நூல் அறிமுக விழாவில் பேராயர்

கலை நூற்பண்பாடு வளரும் இடமாக நவாலியூர் விளங்குகிறது. கல்விசார் நிகழ்ச்சிகளில் கலை வளர்ச்சியும் ஒன்று. இன்று கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரையின் ''சின்னவனா? பெரியவனா?'' என்ற நூலின் வெளியீட்டிலிருந்து இக்கலை வளர்ச்சி பிறக்கிறது. இவரது சேவையைச் சமுதாயத்துக்கு உரிய தேவையாகக் கொள்ள வேண்டும்.

நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் அண்மையில் நிகழ்ந்த கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரை எழுதிய சிந்துநடைக் கூத்து நூல் ''சின்னவனா? பெரியவனா?'' அறிமுக விழா நடைபெற்றது. மேற்படி விழாவுக்குத் தலைமை வகித்த தென்னிந்திய திருச்சபையின் பேராயர் எஸ். ஜெபநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடிகர் இன்பராசா என்பவர் நவாலியூரில் அவதரித்தவர் பலர் இவ்வூரில் கலைவளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்து வருகின்றனர் நல்லூர், யாழ்ப்பாணத்தில் இளங்கலைஞர் மன்றங்கள்தோற்றுவிக்கப்பட்டது போன்று நவாலியூரிலும் கலைஞர் மன்றம் கட்டாயம் தோற்றுவிக்கப்படவேண்டும்-என்று பேராயர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா கருத்துரை வழங்குகையில்—

நவாலியூர் என்று சொல்லும் போது சோமசுந்தரப் புலவர், கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோரது எண்ணங்கள் வரும் ஆனால் கலாபூஷணம் நா. செல்லத்துரையின் நடிப்பை நான் பார்த்ததில்லை, அவரது ஆத்மாவை நான் பார்ப்பதனால் அவரது நடிப்பைப் பார்த்து மட்டக்களப்பு இறால் குழம்பைச் சுவைப்பது போல் சுவைப்பேன். ஈழத்து நாடகத்துறையைப் பற்றி எழுதுபவர்கள் நவாலியூர் நா. செல்லத்துரைக்கும் கணிசமான பங்கு அளிக்க வேண்டும். இவர் ஓர் ஏழைக் கலைஞன் சைவவித்துக்குள்ளாக வெளிவரும் ஒருகிறிஸ்துவ நூலை வெளிக்கொணர்ந்தவர் என்ற பெருமையை இவர் பெறுகிறார்— என்றார்.

வலிகாமம் கல்விவலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமான திருமதிகோகிலா மகேந்திரன் தமது உரையில்—

சமநிலை பேண முடியாத இன்றைய நம்நாட்டுச் சூழ்நிலையில் இவரது பணி சிறந்தது. கிராமிய நாடகத்துக்கூடாக இக்கதை பிறந்துள்ளது. அது மட்டுமன்றி பழைய கூத்துச் சாயலையும் இது கொண்டுள்ளது — என்றார்.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ. அருந்தவநாதனும் இந் நாடகநூலுக்குரிய மதிப்புரையை வழங்கினர்.

நவாலி தெற்கு முரசொலி சனசமூக நிலையத்தினரால் இந்நூல் அறிமுக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டாக்டர் சோ. சுந்தரராஜன் முதற்பிரதியை பெற்றுக் கொண்டார். (அ-90)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், செப். 5

சுழிபுரம் மேற்கு பூரணை புஷ்கலாதேவி சமேத அரிகர புத்திர ஐயனார் ஆலய சங்காபிஷேகப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும்.

பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டபப்பூசை இடம்பெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவப் பொங்கல் இடம்பெறும்

(க-28)

# இடம்பெயர்ந்த 77 குடும்பங்களுக்கு சுன்னாகத்தில் 2,000 ரூபா பணம்

தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தங்கி வாழும் மற்றொரு தொகுதி குடும்பங்களுக்கு நிவாரணக் கொடுப்பனவாகிய இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட உள்ளது.

நாளையும், 7 ஆம், 8 ஆம், 12 ஆம் திகதிகளிலும் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக 774 குடும்பங்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்படும்.

சுன்னாகம் மக்கள் வங்கியூடாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

கொடுப்பனவைப் பெற உள்ள குடும்பங்கள் தத்தம் கிராம அலுவலரிடம் அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை என்பவற்றைக் கொண்டு சென்று காட்டி உரிய தினத்தில் மக்கள் வங்கியில் தமது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக கொடுப்பனவைப் பெற உள்ள குடும்பங்கள், கொடுப்பனவுத்திகதிபோன்ற விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### புதன்கிழமை

கிராம சேவையாளர் பிரிவு ஜே - 182 இல் 52 குடும்பங்கள், ஜே — 184 இல் 11குடும்பங்கள், ஜே — 185 இல் 01 குடும்பம், ஜே — 186 இல் 96 குடும்பங்கள்.

### வியாழக்கிழமை

கிராம சேவையாளர் பிரிவு ஜே — 187 இல் 113 குடும்பங்கள், ஜே —188இல் 22 குடும்பங்கள், ஜே—189இல்98குடும்பங்கங்.

### வெள்ளிக்கிழமை

கிராமசேவை அலுவலர் பிரிவு ஜே—191இல் 55 குடும்பங்கள், ஜே — 193 இல் 19 குடும்பங்கள், ஜே—194 இல் 25 குடும்பங்கள், ஜே — 195 இல் 50 குடும்பங்கள்.

### செவ்வாய்க்கிழமை

கிராமசேவை அலுவலர் பிரிவு ஜே — 196 இல் 104 குடும்பங்கள், ஜே — 197இல் 128 குடும்பங்கள்.

(ஜ-152)

## புலமைப் பரிசில் கொடுப்பனவு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கொடுப்பனவு, நிலுவைகள் யாவும் யாழ்ப்பாணக் கல்வி வலயங்களூடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1997 ஆம் ஆண்டு முதல் வழங்கபடாதிருந்த நிலுவைகளே வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி 1997, 1998, 1999 ஆகிய வருடங்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கொடுப்பனவைப் பெறத்தகுதியுள்ள மாணவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா ஆச்சிப்பிள்ளை

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா ஆச்சிப்பிள்ளை அவர்கள் 04—09—2000 நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் (விக்கினேஸ்வரி லொறி உரிமையாளர் — வவுனியா), அன்பு மனைவியும், விக்கினேஸ்வரி (பெரியபுல மகாவித்தியாலய ஆசிரியை), கதிரமலை (கதிர்ஸ்ரோர்ஸ்- மருதனார்மடம்), செல்வரத்தினம் (வவுனியா), தியாகராஜா (பிரான்ஸ்), மனோகரன் (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தாயாரும், குழந்தைவேலு (உதவி ஆணையாளர், கமநல சேவைத் திணைக்களம், முல்லைத்தீவு), விஜயலட்சுமி, மகேஸ்வரி, செம்பொற்சோதி, ஆனந்த ரஞ்சிதம் ஆகியோரின் மாமியாரும், சரத்சந்திரா, காலஞ்சென்ற சத்தியேந்திரா, சமுத்திரிகா, கார்த்திகா, திவாகரன், கிரிஜா, ஹரிகரன், நிசாந்த், விசாந்த், விஜய், காயத்ரி, சங்கீதா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05—09—2000 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு (பழைய நேரம்) இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கதிரமலை
(மகன்).

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(78027)



## ஐந்தாண்டு நினைவலைகள்

தோற்றம் 18 — 04 — 1907



மறைவு 02 — 09 — 1995

### அமரர் ஆறுமுகம் கந்தையா

(இளைப்பாறிய தபாலதிபர், கோப்பாய்)

திதி: பூர்வபட்ஷ அட்டமி 05 - 09 - 2000

அன்புத் தெய்வமே! ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தாலும் உமது அன்பு ஊற்று என்றும் எம்மை விட்டு அகலாது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் ஈசனைத் துதிக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி தெற்கு,
கைதடி.

(77798)

# வன்முறைகள் தலைதூக்கக்கூடிய 200 இடங்கள் இனங்காணப்பட்டன

கொழும்பு,செப்.5

தேர்தல் வன்முறைகள் தலைதூக்கக்கூடிய இருநூறுக்கும் மேற்பட்ட இடங்களை தேர்தல் திணைக்களம் கடந்த கால தேர்தல் வன்செயல்களின் அடிப்படையில் இனங்கண்டு, அவை பற்றி பொலீஸ் துறைக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்திருக்கின்றது.

எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் இந்தப்பகுதிகளில் தேர்தல் வன்முறைகள் தலைதூக்கலாம். எனவே இப்பகுதிகளில் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளைப் பொலீஸார் மேற்கொள்வதற்கு வசதியாகவே இந்த தகவல்கள் திரட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும், மாகாணசபைத் தேர்தல் காலத்திலும் இப்பகுதிகளில் நடந்த வன்முறைகளை ஆதாரமாகக் கொண்டே இந்த இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

தேர்தல் வன்செயல்கள் பயங்கரமான முறையில் நடைபெறும் பகுதிகள் இவை என அடையாளம் காட்டப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளிலுள்ள வாகுச்சாவடிகளில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலீஸ் சேவையில் கண்டிப்புக்கு பெயர் போன அதிகாரிகள் மூலம் செய்வதன் மூலம் விரும்பத்தகாத தேர்தல் வன்முறைகள் நிகழ்வதை தடுக்க முடியும் எனத்தேர்தல் திணைக்களம் நம்புகிறது.

எதிரணி வாக்களிப்பு முகவர்கள் மிரட்டி வெளியேற்றப்படுவது-

கும்பலாக வாக்களிப்பு நிலையங்களுக்குள் புகுந்து தேர்தல் கடமையில் ஈடுபட்டிருப் போருக்கு அச்சுறுத்தல் விடுத்து கள்ளவாக்குகளை திணிப்பது -

எதிரணியினர் கூடுதலாக உள்ள பகுதி வாக்களிப்பு நிலையங்களை உரிய காலத்துக்கு முன்னரே மூட வைப்பது -

வாக்குச்சீட்டுகளை அபகரிப்பது-

வாக்குச்சாவடிக்கு செல்வோரைத்தடுப்பது -

குறிப்பிட்ட ஒரு சின்னத்துக்கே போடவேண்டுமென உத்தரவிடுவது-

இன்றேல் குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்படும் என்று மிரட்டுவது போன்ற வன்முறைகள் கடந்த மாகாணசபைத் தேர்தல் காலத்தில் நடந்திருக்கின்றன.

இவை நடைபெற்ற பகுதிகளையும் தேர்தல் திணைக்களம் முன்னைய முறைப்பாடுகளை அடிப்படையாக வைத்து இனங்கண்டறிந்து பொலீஸாரின் கவனத்துக்கு அறிவித்துள்ளது.

பல்வேறு தேர்தல் காலங்களிலும் இத்தகைய செயல்கள் இப்பகுதிகளில் நடைபெறுவதாக கண்டறியப்பட்டதையடுத்தே தேர்தல் திணைக்களம் இந்தத் தகவலைத் திரட்டி பொலீஸாருக்கு சமர்ப்பித்திருக்கிறது.

வெள்ளம் வரும் முன் அணை கட்டுவது போல தேர்தல் வன்முறைகள் தலைதூக்குவதற்கு முன் அதற்கு எதிரான, முன்னெச்சரிக்கையான நடவடிக்கையை பொலீஸார் கையாள வேண்டும் என தேர்தல் திணைக்களம் எதிர்பார்க்கிறது.

(ஐ-6)


## மோட்டார் சைக்கிளைக் காணவில்லை

நல்லூர் திருக்கல்யாணத்திருவிழா அன்று நல்லூர் அரசடிச் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 509-1057 இலக்கமுடைய எனது சாம்பல் நிற ஹொண்டா - C 50 மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. (செசி இல. C 50 -6048664 என்ஜின் இல. C 50E -6048716) தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் அல்லது இதுபற்றித் தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

**S.R.சரவணபவன்,**
ஸ்ரீ சத்திய சாயி நிலையம், பிள்ளையார் கோயிலடி,
தாவடி, கொக்குவில்.
(78033)



## ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கக் கூட்டம்

எதிர்வரும் வியாழக்கிழமை (07.09.2000) காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர்கல்லூரியில் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு சங்கத் தலைவர் பா.மணிவண்ணன் கேட்டுள்ளார்.

(78017)



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

### நூலக வார இறுதிநாள் நிகழ்வும் நூல் கண்காட்சியும்

இடம் :- யாழ்.தே.க.க (இராமநாதன் கல்லூரி)
காலம் :- நாளை (06.09.2000) புதன் காலை 9.30மணி
தலைவர் :- **திரு.பா.தனபாலன்**
(உப பீடாதிபதி (கல்வி யாழ்.தே.க.க)

**விருந்தினர்கள்**: மூத்த எழுத்தாளர் **திரு. சொக்கன்**
மூத்த எழுத்தாளர் **திரு. புத்தொளி சிவபாதம்**
நல்லூர் பிரதேசசெயலா **திரு கலாநிதி க.குணராசா**

கண்காட்சியைத் திறந்து வைப்பவர்

**திரு. திருநாவுக்கரவு கமலநாதன்**
(பீடாதிபதி - யாழ்.தே.க.க.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கண்காட்சியில் மலிவு விலையில் நூல்கள் விற்பனைக்கு உண்டு.

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
*234, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி:-2573
(78024)


# மாணவன் உட்பட ஆறு இளைஞர்கள் கைது!

கொழும்பு,செப்.5

வவுனியா நகரில் இருந்து சுமார் 4 மைல் தொலைவில் உள்ள மதவு வைத்தகுளம் கிராமப் பகுதியை நேற்று முன்தினம் காலை சுற்றி வளைத்த விசேட அதிரடிப்படையினர் 6 இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்காகக் கொண்டு சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் ஒருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களும் அடங்கி உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவனாகிய சாமிநாதன் நிர்மலன் (19), மற்றும் அமரசிங்கம் உதயகுமார்(23), பரமராசா கிரிதரன்(22) ஏ.சுதர்சன்(20), சகோதரர்களான குணதீஸ்வரன்(25), சுதாகரன்(22) ஆகிய பிரஸ்தாப நபர்கள் விசாரணைக்காக வவுனியா பூங்கா வீதியிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(ஐ-6)

# ஐ.நா. புத்தாயிரம் மாநாட்டுக்கு ஜனாதிபதி செல்லமாட்டார்?

கொழும்பு,செப்.5

நாளை 6ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் ஆரம்பமாக உள்ள புத்தாயிரமாண்டு உச்சி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கலந்து கொள்ள மாட்டார் என்று நம்பகரமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகைகளில் செய்தி வெளியாகி உள்ளது.

ஐக்கியநாடுகள் சபையின் 55 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையிலான உயர் மட்டக் குழுவே கலந்து கொள்ளும் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒக்ரோபர் 10ஆம் திகதி இலங்கையில் பொதுத் தேர்தல்கள் இடம் பெற இருப்பதால் கட்சியின் தேர்தல் ஏற்பாடுகளை கவனிக்கும் பல அலுவல்கள் இருப்பதால் ஜனாதிபதி இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

'21ஆம் நூற்றாண்டில் ஐக்கியநாடுகள் சபை' என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் புத்தாயிரமாண்டு உச்சி மாநாட்டில் என்றுமில்லாத அளவில் உலகத் தலைவர்கள் ஒன்று கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ-6)

# சர்வதேச ரீதியில் விமான கட்டணங்கள் உயர்வு

கொழும்பு,செப்.5

சர்வதேசரீதியில் விமான சேவைகளுக்கான கட்டணங்கள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 3 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக சர்வதேச விமானப் போக்குவரத்து சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் அமைந்துள்ள சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தினால் இந்தக் கட்டண உயர்வு பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையிலும் விமான சேவைகளுக்கான கட்டணம் உயர்த்தப்படும். இலங்கையில் கடந்த மூன்று வருடங்களின் பின்னர் விமான சேவைக் கட்டணம் உயர்த்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கட்டண உயர்வின் படி விமானப் பயணச்சீட்டுக்கான கட்டணங்கள் 300 ரூபாவில் இருந்து 2ஆயிரம் ரூபாவரையில் உயர்வடையவுள்ளன.

இதேவேளை -

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விமானப் பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வோர் இன்றிலிருந்து எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் தற்போது நடைமுறையில் உள்ள கட்டணத்துடன் பிரயாணம் செய்ய முடியும். 15ஆம் திகதிக்குப் பின்னர் விமானப் பயணச்சீட்டைக் கொள்வனவு செய்பவர்களுக்குப் புதிய விலை உயர்வின்படி கட்டணம் அறவிடப்படும்.

(ஐ-6)

## கட்டடத்துக்கு அடிக்கல்

காரைநகர்,செப்5

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று செவ்வாக்கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைப்பார். சிறப்பு அதிதியாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.மதனராஜன் கலந்து கொள்வார்.

(ஐ-73)

## கலைப்பீட இறுதிப் பரீட்சை

கோப்பாய்,செப்5

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இறுதிவருடப் பரீட்சைகள் நேற்று ஆரம்பமாகின.

ஷெல் மற்றும் விமானச் சத்தங்களுக்கு மத்தியில் மாணவர்கள் நேற்று இப் பரீட்சையை எழுதினர். தொடர்ந்து இம்மாதம் 13ஆம் திகதி வரை பரீட்சைகள் நடைபெறும். என அறிவிக்கப்படுடுள்து.

(ஐ-72)

## கொடிகாமம் செல்வது தொடர்ந்து தடை

தென்மராட்சி,செப்.5

வடமராட்சியிலிருந்து கொடிகாமம் செல்வதற்கு நேற்றும் முள்ளிச் சோதனைச்சாவடிக்குச் சென்ற பலர் திருப்பி அனுப்பப்பட்டனர். ஆனால் தென்மராட்சிப் பகுதியிலிருந்து பலர் முள்ளிச் சோதனைச்சாவடி ஊடாக வடமராட்சிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை-

நேற்று கொடிகாமம், வரணி ஆகிய பகுதிகள் வழமை நிலையில் காணப்பட்டதாகவும், இப்பகுதிகளில் உள்ள சந்தைகள், வர்த்தக நிலையங்கள் இயங்கியதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

(ஐ-117)

## மீனுக்குத் தட்டுப்பாடு

தென்மராட்சி,செப்5

நேற்று வடமராட்சி கடலில்மீன் பிடிக்க அனுமதிக்கப்படாததால் வடமராட்சிப்பகுதியில் மீனுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவியது.

(ஐ-117-173-109)


சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)
பொதுமுகாமையாளர் தரம் 101/05,

## பதவி வெற்றிடம் (நிரந்தரம்).

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து (இருபாலாரும்) உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் ரூபா 10 செலுத்தி சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் "தலைவர், சங்கானை ப.நோ.கூ. சங்கம், சங்கானை" என விலாசமிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும். சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1. சம்பள அளவுத் திட்டம் :
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 31/97 - 07 அமைய
3700 - 6100
110 x 10 - 130 x 10

2. தகைமைகள் :
அ. கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்..
அல்லது
ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடத்துக்குக்குறையாத அனுபவம்.
அல்லது
இ. கூட்டுறவு உயர் தராதரப்பத்திரம் / க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 8 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

3. வயதெல்லை : 18 - 45

4. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்டபின்னர் அதுவெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

5. விண்ணப்ப முடிவுத்திகதி:- 2000.09.20 பகல் 12.00 மணி.

**அ.அரியரத்தினம்**
தலைவர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்,
சங்கானை.

02.09.2000
(c/12807)



## தகவல் தரவும்

மீசாலை கிழக்கைச் சேர்ந்த (சோலை அம்மன் கோயில்)

**சின்னையா சிவராசா**

என்பவர் 30.08.2000 அன்று திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வருவதாக "சிற்றி ஓவ் றிங்கோ" கப்பலில் வந்துள்ளார். ஆனால் இவர் இதுவரை வீடு வந்து சேரவில்லை. இவரது விவரம் தெரிந்தவர்கள் க.புவனேந்திரன் (அப்பு) கண்டாவத்தை அல்வாய் கிழக்கு, அல்வாய் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

இவரைத் தேடுபவர்கள்
**சிவராசா - செல்வராணி**
(மனைவி)
**பிள்ளைகள்**

கண்டாவத்தை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(78032)

# நேற்று வேட்பு மனுத்தாக்கல் செய்த ஏழு அணிகளின் விவரம் வருமாறு:

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ். மாவட்டத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று மூன்று அரசியல் கட்சிகளும் நான்கு சுயேச்சைக் குழுக்களும் யாழ்.செயலகத்தில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தன.

வேட்பு மனுத் தாக்கல் செய்த கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் விவரங்கள் வருமாறு:-

### தேசிய ஐக்கிய முன்னணி

முதன்மை வேட்பாளர்-
ஞானச்சந்திரன் சின்னத்துரை.
* அப்துல்காதர் இக்பால்.
* சிவகுருநாதன் இரட்ணதுரை.
* பாஷா சபீப் மொகிதீஸ் பிச்சை.
* எஸ்.ஜெயநாதன்.
* ஆசன் குத்தூஸ் உவைஸ்.
* ஜெயரட்ணம் அப்பாத்துரை.
* சாந்தா பிரேமலால் அபீகூன்.
* லங்காநேசன் தம்பையா.
* டாக்டர் எஸ்.சிவகுமாரன்.
* அல்லா பிச்சை மொகதீன் ஹுசைன்.
* டிவகலால் சுந்தரம்.

### லிபரல் கட்சி

முதன்மை வேட்பாளர் -
ஜே.டி.என்.ஹெட்டியாராய்ச்சி.
* சமன் இந்திரஜித்.
* ஜே.சி.ஆர்.நூட்டின்.
* வி.பி.முத்தையா.
* எஸ்.அழகராஜா.
* என்.லோகேஸ்வரன்.
* எம்.ஏ.அம்பலவாணர்.
* பி.மரியதாசன்.
* எம்.மகேஸ்வரி.
* எஸ்.இளையதம்பி.
* எஸ்.நிர்மலானந்தன்
* எஸ்.சுப்பிரமணியம்.

### சிங்களே மாசம்பத பூமிபுத்ரக் கட்சி

முதன்மை வேட்பாளர்
உதயலால் ராஜபக்ச.
* ஜெயந்தி மாலினி.
* பிரசன்ன பிரதீப்குமார்.
* அஜந்தா றோகினி விஜயகோன்.
* ஆர்.பி.சுமதிவர்த்தன.
* எம்.ஜி.எஸ்.மானிஸ்.
* பேனாட் ஜினேந்திரன்.
* உயன ஆராச்சிகே அபேவிக்ரம.
* உயனகேவகே புத்ததாஸ.
* துசித்த பிரசன்ன பத்திரன.
* சுயித் குமார.
* மகிந்த ஜயசேகர.

### ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சார்பான சுயேச்சைக் குழு

முதன்மை வேட்பாளர்-
வேல்முருகு தங்கராஜா.
* சின்னையா சிவஞானம்.
* ஆழ்வாபிள்ளை கந்தசாமி.
* அப்துல் அலி சுல்தான் மொஹிடீன்.
* திருமதி ஜயந்தி பரமலிங்கம்.
* தாமோதரம்பிள்ளை சண்முகநாதன்.
* கதிர்காமநாதர் ஜெயக்குமார்.
* தங்கராஜா தேவகுலநாயகம்.
* கனகசிங்கம் செல்வராஜா.
* கிருஷ்ணசாமி முத்துக்குமார்.
* முருகேசு அற்புதராசா
* மார்க்கண்டு துரைராசா

### ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) சுயேச்சைக் குழு

முதன்மை வேட்பாளர் -
தம்பிராசா சுபத்திரன்.
* திருநாவுக்கரசு சிறிதரன்.
* நாகலிங்கம் ராசேந்திரம் ராஜேஸ்வரன்.
* செல்லையா சுந்தரமூர்த்தி.
* அண்ணாமலை வரதராஜப்பெருமாள்.
* கந்தையா சிவராஜா.
* இரத்தினம் சர்வலோகநாதன்.
* மனுவல் மங்களநேசன்.
* வல்லி சுந்தரம்.
* முருகையா மனோரஞ்சன்.
* வைரமுத்து விக்னேஸ்வரன்.
* நீக்கிலாப்பிள்ளை மருசலீன்.

### வடக்கு முஸ்லிம் உரிமைக்கான அமைப்பு

முதன்மை வேட்பாளர் -
அஹமட் சுல்தான் சுபயன்.
* மீராசஹிப் மொஹமட் றமீஸ்.
* சாகுல் ஹமீட் தையூர்.
* மொஹமட் மானப்தீன்.
* சுல்தான் மொஹமட நியாஸ்.
* மொஹமட் முபாரக்.
* சாகுல் ஹமீட் அஸாங்கனி.
* மீரான் மொகைதீன் சகீட்.
* மொஹமட் ஹரீம்.
* மொஹமட் யுசன் தம்பி அப்துல் ஹயூம்.
* மொஹமட் ஜமீல்.
* மொஹமட் சக்திரியா.

### தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) - சுயேச்சைக் குழு

முதன்மை வேட்பாளர் -
கந்தர் நல்லதம்பி.
* கனகலிங்கம சிவாஜிலிங்கம்.
* கிருஸ்ணன் சுப்பையா.
* மனுவல்பிள்ளை அலோசியஸ்.
* செல்லையா பத்மநாதன்.
* இராமநாதன் ஜெயசிங்கம்.
* சிவபாதம் வினோதலிங்கன்.
* நவரத்தினம் கணேஸ்வரன்
* சண்முகம் ஜெயச்சந்திரபோஸ்.
* நடராசா கனகரத்தினம்.
* வேலாயுதம் சிவசுப்பிரமணியம்.
* கிருஸ்ணன் கௌரிபாலன்.

### சிங்கள சுயேச்சைக் குழு

முதன்மை வேட்பாளர் -
ஜெயக்கொடி கங்கா நாமலாகே றோகன சுதர்ம ஜயக்கொடி.
* இலங்கசிங்க முதியான்சகே தர்மசேன.
* பத்திரன பித்தவெலாகே காமினி ஜெயசேகர.
* கே.பி.சோமதாஸ.
* ஏ.சேனநாயக்க.
* ஏ.எஸ்.தயவன்ச கிஸ்ரி.
* ரீ.கே.எம்.சபிலகுமார.
* எம்.கே.நாளினி சந்திரலதா.
* எம்.வி.விமலகாமி.
* எஸ்.ஆர்.ஜெயத்திலக.
* ஆர்.எம்.எஸ்.பேனாட் விக்கிரமசிங்க.
* எஸ்.ஜெயரட்ண

(இ-5-9)

# திருமலை மாவட்டத்தில் 23 அணிகள் போட்டி

திருகோணமலை,செப்.5

திருகோணமலை மாவட்டத்தில் பதினெட்டு அரசியல் கட்சிகளும் ஐந்து சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 23 அணிகள் களத்தில் குதித்துள்ளன.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் திருகோணமலை செயலகத்தில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட போது பெதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் 60க்கும் மேற்பட்ட வாகனங்களிலும் ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் 40க்கு மேற்பட்ட வாகனங்களிலும் வந்திருந்தனர். வெடிகள் கொளுத்தி பெரும் குதூகலத்தில் ஆதரவாளர்கள் ஈடுபட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரில் இங்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் எழுப்பிய ஆட்சேபத்தை அடுத்து அந்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

மீனவர் சங்கங்களின் பிரதிநிகள் சுயேச்சைக் குழுவாக போட்டியிடச் சமர்ப்பித்த வேட்பு மனு கட்டுப்பணம் செலுத்தியதில் ஏற்பட்ட சிக்கலால் நிராகரிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி, ஈ.பி.டி.பி., ரெலோ ஆகிய தமிழ்க் கட்சிகள் உட்பட 13 அரசியல் கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

அத்துடன் தமிழ்ப் பிரமுகர்கள் இடம்பெறும் மூன்று சுயேச்சைக் குழுக்களும் களத்தில் குதித்துள்ளன. (இ-3-150)

## காங்கிரஸின் தேசியப் பட்டியலில்

# முதன்மை வேட்பாளராக யாழ்.பல்கலை மாணவர்!

யாழ்ப்பாணம்,செப்.5

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள தேசியப் பட்டியலில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் முதன்மை வேட்பாளராக இடம்பெறவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் சதாசிவம் ஐங்கரன் என்பவரே முதன்மை வேட்பாளராக இடம்பெறவுள்ளார்.

தமிழ் காங்கிரஸின் கொழும்புத் தலைமை அலுவலகத்தில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் சதாசிவம் ஐங்கரனை தேசியப் பட்டியில் முதன்மை வேட்பாளராக நியமிப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக காங்கிரஸின் பொதுச் செயலாளர் ந.குமரகுருபரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காங்கிரஸ் கட்சியின் விசேட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு முழு ஆதரவையும் வழங்குவதாக உறுதி அளித்துள்ளனர் என்று கட்சியின் பொதுச் செயலாளர் வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாடு முழுவதும் 5 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டி

கொழும்பு,செப்.5

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சுமார் 5 ஆயிரம் வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

நாட்டின் வரலாற்றில் பொதுத் தேர்தல் ஒன்றில் இவ்வளவு அதிகமானோர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருப்பது இதுவே முதல் தடவையென்று கூறப்படுகிறது. அத்துடன் அதிக எண்ணிக்கையான அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடும் தேர்தலும் இதுவாகும்.

வேட்பாளர் பட்டியல்கள் தொடர்ந்து ஒழுங்கு படுத்தப்படுகின்றன என்றும் இதனால் வேட்பாளர்களின் உண்மையான எண்ணிக்கையை இன்னமும் திட்டவட்டமாகக் கூற முடியாது என்றும் பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

பொ.ஐ.முன்னணி, ஐ.தே.கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன அதிகமான மாவட்டங்களில் போட்டியிடுகின்றன. வேட்பாளர் பட்டியல்கள் சிங்கள அகராதிக்கேற்ப பட்டியலிடப்படும். இந்தப்பணி இன்று ஆரம்பித்து தொடர்ந்து மூன்று நாள்களுக்கு இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்குப் பின்னர் இந்தப் பட்டியல்கள் விருப்பத்தேர்வு எண்ணுடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். வர்த்தமானியை வார இறுதியில் வெளியிடுவதற்கு தேர்தல் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

நேற்றுக்காலை அனைத்துக் கட்சிகளும் தேர்தல் ஆணையாளரிடம் தமது தேசியப் பட்டியலைச் சமர்ப்பித்தன என்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு கட்சியினதும் தேசியப் பட்டியலில் 25 அங்கத்தவர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் கூறினார். (இ-3-7-8)

# அம்பாறையில் 18 அணிகள்! முஸ்லிம் பெண்ணும் போட்டி!!

அம்பாறை,செப்.5

அம்பாறை மாவட்டத்தில் பத்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் 18 அணிகளைச் சேர்ந்த 180 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

அம்பாறைச் செயலகத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

அந்தப் பட்டியலின் முதன்மை வேட்பாளரான அவர் ஆறு இடங்களைத் தமது முன்னணி கைப்பற்றும் என்றும் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளுடன் பல்வேறு கட்சிகள் போட்டியிடுகின்றன.

அம்பாறை தமிழ் மகாசபை சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றது.

முதல் தடவையாக முஸ்லிம் பெண் ஒருவர் இந்தத் தேர்தலில் அம்பாறைத் தொகுதியில் போட்டியிடுகின்றார். சாய்ந்தமருதைச் சேர்ந்த திருமதி ரிகான மொகிதீன் பாவா என்ற பெண்ணே சுயேச்சைக் குழு ஒன்றில் போட்டியிடுகின்றார். (இ-3-14)

# முஸ்லிம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறிய போது யாழ்ப்பாண மக்களுடன் ஏற்பட்ட பிரிவை நீக்கி மீண்டும் உறவை வளர்ப்பதையும்-

தமிழ் மக்களோடு ஒற்றுமையாக, ஐக்கியமாக மீண்டும் வாழ்வதையும் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகிறோம்.

வடக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு உரிய நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதும் முஸ்லிம்கள் அகதியாக வாழக்கூடிய சூழலில் ஏற்படக்கூடிய உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுப்பதுமே எமது அமைப்பின் நோக்கமாகும்.

கொழும்பு, புத்தளம் உட்படப் பல பகுதிகளில் தமிழ் - முஸ்லிம் மக்கள் உறவு தொடர்பாக நாம் பல கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம்.

எமது மக்களுடைய ஒற்றுமையை வலுப்படுத்தக்கூடியதாக தேசிய போராட்டத்தினை ஒன்றிணைத்து முன்னெடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் பல தமிழ்ப் பிரமுகர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தினோம்.

எமது மக்கள் மீண்டும் எமது மண்ணுக்கு வந்து தமிழர்களுடன் வாழ வேண்டும். இதற்கு சமாதானம் வரவேண்டும்.சமாதானம் ஏற்பட்டால் அது போலித்தனமாக இருக்கக் கூடாது.

சகல இன மக்களும் தமது சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையிலே இந்தச் சமாதானம் நிலை நாட்டப்பட வேண்டும் என்ற அடிப்படையில் கொழும்பில் பல ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளோம்.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இந்த நாட்டிலே இனப்பிரச்சினையால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக்காட்டும் வகையிலே இந்தப் போராட்டங்களை நிகழ்த்தினோம்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் தற்பொழுது பலதரப்பட்ட துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

இதே போன்றுதான் முஸ்லிம் மக்களுக்கும் பிரச்சினை இருக்கிறது.

அடிப்படைப் பிரச்சினைகள்-நாளாந்தப்பிரச்சினைகள்- அதிகமாக இருப்பதனால் முஸ்லிம் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பல அரசியல் கட்சிகளையும் நம்பி ஏமாந்த சூழ்நிலையில் அரசியல் குறிக்கோளற்ற அமைப்பாக இருந்த எம்மை முஸ்லிம் மக்கள் ஒன்று சேர்த்து தேர்தலில் நிற்குமாறு வலியுறுத்தினார்கள்.

நீங்கள் தேர்தலில் நிற்கவேண்டும், எங்களின் பிரதிநிதித்துவத்தைப் பெறவேண்டும் என்ற மக்களின் வேண்டுதலின் பேரில் இந்தத் தேர்தலில் எமது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம்.

பல அரசியல் கட்சிகள் தம்முடன் இணைந்து போட்டியிடுமாறு எம்மைக் கேட்டன. நாங்கள் அவற்றை நிராகரித்து தனித்துவமாகப் போட்டியிடுகின்றோம். இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5-9)

## சேவையில் நிரந்தரம் இல்லை

வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கொத்தணியின் கீழ் இயங்கும் திக்கம் வடிசாலையில் பணிபுரியும் சுமார் 15 தொழிலாளர்கள் கடந்த 5 வருட காலமாக, சேவையில் நிரந்தரமாக்கப்படாமையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-109)

## நிவாரண பெர்மிட் வழங்கல்

தென்மராட்சி,செப்.5

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான செப்ரெம்பர் மாத உலர்உணவு நிவாரணத்துக்குரிய பெர்மிட்டுக்கள் அந்தந்த கிராம அலுவலர்களினால் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன. ஒக்ரோபர் மாதத்துக்குரிய நிவாரணத்துக்கான பெர்மிட்டுக்கள் அடுத்த வாரமளவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஈ-117)

# சிறை அதிகாரிகயை மிரட்டிய கைதி சுட்டுக் கொலை!

கொழும்பு,செப்.5

தன்னையும் சக கைதிகளையும் விடுவிக்குமாறும் இல்லையேல் குண்டை வெடிக்கவைக்கப் போவதாகவும் சிறைச்சாலை அதிகாரியை மிரட்டிய கைதியை பொலீஸார் சுட்டுக்கொன்ற சம்பவம் நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நீர்கொழும்புச் சிறைச்சாலைக்குள் சக கைதிகளுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரஸ்தாப கைதி, கைக்குண்டு ஒன்றை சிறைச்சாலை அதிகாரிகளிடம் காட்டி தம்மையும் சக கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று மிரட்டினார்.

இதைத் தொடர்ந்து பிரஸ்தாப கைதி தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் நீர்கொழும்புப் பொலீஸாருக்குத் தகவல் அனுப்பினர்.

அங்கு விரைந்த பொலீஸார் பிரஸ்தாப கைதியைச் சரணடையுமாறு கோரினர். அதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்கவே கைதியைச் சுட்டுக்கொன்றதுடன் கைக்குண்டையும் மீட்டனர்.

எவ்வாறு அந்தக் கைதி குண்டைச் சிறைச்சாலைக்குள் கொண்டு சென்றார் என்பது குறித்துப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-3-8)

## குடாக் கடலில் மீன்பிடிக்கத் தடை

குருநகர்,செப்.5

குடாக்கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கு நேற்றுமுன்தினம் முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று மீன்பிடிச் சங்கங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக மீனவர்கள் தமது கடற்றொழில் சாதனங்களைக் கடலில் விட்டுவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் - கல் முனையை அண்டிய பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். (இ-3-51)

# அன்ரனோவ் அவசரமாகத் தரையிறங்கியது

கொழும்பு,செப்.5

கொழும்பில் இருந்து பலாலி நோக்கி வந்து கொண்டிருந்த ஏ.என்.32 ரக அன்ரனோவ் விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அவசரமாக அது பலாலித் தளத்தில் இறக்கப்பட்ட போது விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஓடு பாதையில் குறிப்பிட்ட தூரம் ஓடாது சடுதியாக இந்த விமானம் இறக்கப்பட்டதால் ஏற்பட்ட சேதம் உடனடியாகத் திருத்தப்பட்டு மீண்டும் அது சேவையில் ஈடுபடுத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது.

காயமடைந்த படையினரைக் கொழுமபுக்கு அழைத்துச் செல்லும் பணி.இதன் காரணமாகத் ஒரு மணி நேரம் தாமதித்ததாகவும் கூறப்பட்டது.

அதே சமயம் - அன்ரனோவ் போக்குவரத்து விமானங்கள் இரண்டு, புலிகளின் தாக்குதலுக்கு உட்பட்டன என்றும் -

ஆனாலும் அவை பாதுகாப்பாகப் பலாலியில் தரையிறங்கின என்றும்-அந்த விமானங்களின் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன என்றும் - இராணுவத் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

# ஐ.தே.கட்சி ஆதரவாளர் இருவர் அக்கரைப்பற்றில் உயிரிழப்பு!

அம்பாறை,செப்.5

அம்பாறை மாவட்டம் - வரிபத் தஞ்சேனைச் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவமொன்றில் ஐ.தே. கட்சி ஆதரவாளர் இருவர் உயிரிழந்தனர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

அம்பாறை மாவட்டத்துக்கான ஐ.தே.கட்சியின் வேட்பு மனுக்களை அம்பாறைக் கச்சேரியில் தாக்கல் செய்துவிட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்சேகு இஸ்ஸதீன் தலைமையிலான குழு ஒன்று நேற்று மாலை வாகனமொன்றில் அக்கரைப்பற்று நோக்கி சென்று கொண்டிருந்தது.

அப்போது வரிப்பத்தஞ்சேனைச் சந்தியில் நின்ற இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய குழுவொன்று ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் சென்ற வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-7-8-14)

## வேட்பாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் பதவி வகித்த சு.டிவகலாலாவின் பெயரும் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருந்ததாகச் சொல்லப்பட்டது. தேசிய ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் அவசரமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இவர் மீதான தாக்குதல் தொடர்பாக ஒருவரைப் பொலீஸார் தேடி வருகின்றனர். (இ-க-3)

## முப்படைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதாக அவர் தேரர்களிடம் கூறினாராம்.

பலாலியில் தங்கியுள்ள இராணுவத் தளபதியும் ஏனைய தளபதிகளும் ஓரிரு தினங்களில் கொழும்பு திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேசமயம் -

கடந்த வெள்ளிக்கிழமை பலாலி வந்திருந்த கூட்டுப்படைகளின் தளகர்த்தர் ஜெனரல் றோஹான் தளுவத்த நேற்றுக் கொழும்பு திரும்பினார்.

தமது மகள் ரதீஸா ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் பங்குபற்றுவதற்காக அவர் நேற்றுக் கொழும்பு சென்றிருந்தார். (இ-3)

# யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும், தெரிவத்தாட்சி அலுவலருமான க.சண்முகநாதன் தலைமையிலான அதிகாரிகள் குழு யாழ். செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்தது.

பரிசீலனையின் பின்னர் கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் அழைத்த அரச அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதிக் கடிதங்களை அந்தந்த அணிகளின் முதன்மை வேட்பாளர்களிடம் கையளித்தார். வேட்புமனு தொடர்பான எந்தவொரு அணியிலிருந்தும் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் ஆறு சுயேச்சைக் குழுக்களுக்கான சின்னங்களும் நேற்று வழங்கப்பட்டன.

ஈ.பி.ஆர்.எல். எவ். வரதர் அணி சுயேச்சைக் குழுவுக்கு மீனும், இந்த அமைப்பின் சுரேஷ் அணி சுயேச்சைக் குழுவுக்கு தோடம்பழமும், ரெலோ சுயேச்சைக் குழுவுக்கு கப்பலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சுயேச்சைக் குழுவுக்கு தொலைபேசியும், வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் சுயேச்சைக் குழுவுக்கு முச்சக்கரவண்டியும், ஜெயக்கொடி தலைமையிலான சுயேச்சைக் குழுவுக்கு ஆமைப்பூட்டும் சின்னங்களாக யாழ். அரச அதிபரினால் வழங்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையாளரால் ஒதுக்கப்பட்ட சின்னங்கள் வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் யாழ். அரச அதிபருடன் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராசா ஆகியோர் உடனிருந்தனர்.

யாழ்ப்பாண நகரிலும் நல்லூர் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்கள், குண்டு வீச்சுத் தாக்குதல்கள், ஹெலியின் றொக்கெற் தாக்குதல்கள் என்பன தொடர்ந்து வீச்சாக நடைபெற்றதன் மத்தியிலும் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் பணி நேற்று நடந்து முடிந்தது.

தேர்தல் களத்தில் குதித்துள்ள இருபது அணிகளின் விவரம் வருமாறு:-

- ★ ஜனநாயக இடதுசாரி முன்னணி.
- ★ தமிழர் விடுதலைக் கூட்டணி.
- ★ அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்.
- ★ ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.).
- ★ றுகுணு மக்கள் கட்சி.
- ★ பிரஜைகள் முன்னணி.
- ★ ஐக்கிய தேசியக் கட்சி.
- ★ சிஹல உறுமய கட்சி.
- ★ தேசிய ஐக்கிய முன்னணி.
- ★ லிபரல் கட்சி.
- ★ சிங்கள மாசம்பத பூமி புத்ரக் கட்சி.
- ★ வடக்கு முஸ்லிம் உரிமைக்கான அமைப்பு.
- ★ ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.).
- ★ ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்).
- ★ முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி.
- ★ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (வரதர் அணி).
- ★ ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஷ் அணி).
- ★ வேல்முருகு தங்கராசா தலைமையிலான சுயேச்சைக் குழு.
- ★ சுயேச்சைக்குழு (ரெலோ).
- ★ சிங்கள சுயேச்சைக் குழு.

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் சமுகமளிப்பதற்காக கோப்பாயில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு இவர் வந்திருந்ததாகவும்-

நேர்முகப் பரீட்சை முடிவடைந்த பின்னர் அவரது சகோதரியின் மகனான சத்தியசீலன் ரவிசங்கர் (வயது5) என்ற சிறுவனுடன் கந்த ரோடைக்குச் சென்ற சமயம் இந்தத் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது. அந்தச் சிறுவன் தெய்வாதீனமாகத் தப்பினார். (இ-3-10-15-72-139)

## யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரத்தில் உள்ள பாடசாலைகளுக்கு காலையில் மாணவர்கள் வந்திருந்தபோதும் சொற்ப நேரத்தில் அவர்கள் வீடு திரும்பினர்.

யாழ். செயலகத்துக்கு சமீபமாகவும் மற்றும் சுண்டுக்குளிப் பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் செயகத்தில் ஊழியர்களின் வருகையும் குறைந்து காணப்பட்டது.

நேற்றுக் காலையும், பிற்பகலிலும் யாழ். பெரிய கோவில் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் அந்தப் பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்தனர்.

கோப்பாய், இருபாலைப் பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால், அந்தப் பகுதியிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (இ-3-51-72)

# கொழும்புத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் உள்ள விவரங்கள் வருமாறு:-

கொழும்புத்துறையில் படையினர் புதிதாக அமைத்த முன்னரங்க அரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை தாக்குதல்களை நடத்தினர். இரண்டு தடவைகள் உக்கிரத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. எனினும் இராணுவத்தின் நிலைகளை அவர்களால் குலைக்க முடியவில்லை. இச்சண்டையின் போது புலிகள் தரப்பில் பலத்த இழப்புகள் உண்டாகின. புலிகள் தரப்பில் இருந்து 69 சடலங்கள் படையினரால் மீட்கப்பட்டன. அவற்றில் நல்ல நிலையிலிருந்த 15 பேரின் சடலங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

நேற்றும் விமானப்படையினர் புலிகள் மீது கடுந்தாக்குதல்களை நடத்தினர். வான் தாக்குதல்கள் காரணமாக புலிகளுக்கு அதிக இழப்பு ஏற்பட்டது. அவர்களில் 230 பேர் இறந்ததாகவும் 300 பேர் காயமுற்றதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

சரசாலை, நுணாவில் பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னேறிய படையினர் திரும்பி வந்துகொண்டிருந்த போது மீண்டும் இரண்டு தரப்புகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றது.

இச்சண்டையின் போது படையினர் தரப்பில் 43 சிப்பாய்கள் மரணமானார்கள்; 11 பேர் காயமுற்றனர். சிறு காயமடைந்த 287 பேர் சிகிச்சைக்குப் பின்னர் களத்துக்கு அனுப்பப்பட்டனர். புலிகள் தரப்பிலும் பலத்த இழப்புகள் ஏற்பட்டன - என்று தெரிவிக்கப்பட்டது.

ஞாயிறு, திங்கட்கிழமைகளில் விடுதலைப்புலிகளிடம் இருந்து படையினர் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரமும் அறிக்கையில் உள்ளது.

இதேவேளை -

நேற்று அதிகாலை முதல் கொழும்புத்துறைப் பகுதியிலும் தென்மராட்சிப் பிரதேசத்திலும் நடைபெற்ற தாக்குதல்களின் போது மிக் குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிகளும் கடும் தாக்குதல்களை அடிக்கடி நடத்தின. பகலிலும், மாலையிலும், இரவிலும் என்று ஷெல், குண்டுத் தாக்குதல்களால் யாழ்.நகரம், நல்லூர், நாயன்மார்கட்டு மற்றும் புறநகரப் பகுதிகள் அதிர்ந்தன. ஹெலிகள் அடிக்கடி தாழப்பறந்து றொக்கெட் தாக்குதல்களை நடத்தின. பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அவற்றை அண்டிய பகுதிகளையும் சேர்ந்த மக்கள் பாதுகாப்புக் கருதி இடம்பெயர்ந்தனர். நேற்று முழுவதும் பெரும் பதற்ற நிலையே காணப்பட்டது.

இதேவேளை படையினர் ஐந்து முனைகளில் நடத்திய முன்னேற்ற நடவடிக்கைகளை தாம் முறியடித்துவிட்டதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-க-3-8)


T.R.R.O C.T.C

சலசலப்பற்ற நிறைவான சேவை

MICROSOFT OFFICE 2000

Course Contents
- Introduction to Computer
- Microsoft Disk Operating System
- Microsoft Windows 98, 2000 NT
- Microsoft Word 2000
- Microsoft Power Point 2000
- Microsoft Access 2000
- Microsoft Excel 2000

கணனி கற்பதற்காக T.R.R.O C.T.C ஐ ஏன் நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்?
- ✓ மட்டுப்படுத்தப்படாத செய்முறை வகுப்புக்கள்.
- ✓ போதியளவு கணனி வசதிகள்.
- ✓ ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் மட்டும்.
- ✓ வீடியோ படம், CD மூலம் விளக்கங்கள்.
- ✓ அரசு, தனியார் நிறுவனங்களின் வசதிக்கேற்ப நேர ஒதுக்கீடு.
- ✓ தனிப்பட்ட வகுப்புக்கள்.
- ✓ நூலக வசதிகள்.

கட்டணம் மாதாந்தம் செலுத்தலாம்.
காலம் : 4 மாதம்
ஆரம்பம் : 10.09.2000

T.R.R.O. COMPUTER TRAINING CENTRE

கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம். (C/12804) மானிப்பாய் வீதி, உரும்பிராய்.



எமது இன்றைய CD வெளியீடு

சுரேஸ்கோபி, சாய்குமார் நடித்த
* கங்கா ஒரு தொடர்கதை
* எங்க மாப்பிள்ளை

பிரதிகளை 10 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாம். (C/12813)

கயூரி வீடியோ விஷன்
பஸ் நிலையம், அச்சுவேலி.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

நாதகலாமணி திரு. இ. சிவகுமார்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். புகழேணியின் உச்சியை அடைய வைரவப் பெருமான் அருள் பாலிப்பாராக.

அராலி தெற்கு ~ களவத்துறை
ஞானவைரவர் ஆலய பரிபாலனசபை
(74841)



எமது மக்களின் அரசியற்
பிரச்சினைக்கு
நீதியான, நிரந்தரத் தீர்வுக்கு
போராடியும் வாதாடியும் வரும்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு
உங்கள் வாக்குகளை அளித்திடுங்கள்! ஈ.பி.டி.பி

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



X (C/12812)

யாழ். மாவட்டத்தில் 1998ஆம் ஆண்டு ஈ.பி.டி.பி. எடுத்த முயற்சியினால் உயர் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவப்பட்டுள்ளது.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-09-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.